பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 24 வியாழக்கிழமை 08.03.2018 கதிர் 123

## பொது மலசல கூடத்தில் சிசுவின் சடலம் மீட்பு!



(எஸ்.நிதர்ஷன்)
சாவகச்சேரி நகரத்திலுள்ள பொது மலசல கூடத்திலிருந்து அழுகிய நிலையில் சிசுவின் சடலமொன்று

பக்கம் 18

# இன வன்முறைகளுக்கு உடனே முற்றுப்புள்ளி!

## இலங்கை அரசை வலியுறுத்துகிறது ஐ.நா.

UNITED NATIONS SRI LANKA

கொழும்பு, மார்ச் 08

இலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறைச் செயலை வன்மையாகக் கண்டித்துள்ள ஐ.நா., இன வன்முறைகளுக்குக் காரணமான குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இன வன்முறை தொடர்பில் கொழும்பிலுள்ள ஐ.நா. தூதரகம் நேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையிலேயே வன்முறைக்கு எதிரான கடுமையான கருத்துக்களை ஐ.நா. முன்வைத்துள்ளது. பக்கம் 18

## அரசு, ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்மார் எவருக்கும் முதுகெலும்பு இல்லவேயில்லை

### நாட்டை ஆளும் உரிமையும் கிடையாது எனச் சீறுகிறார் சுமந்திரன்

கொழும்பு, மார்ச்.08
"உண்மைக் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறும் முது கெலும்பு துரதிர்ஷ்டவசமாக அரசிடம் குறைந்துவருகின்றது. அது ஜனாதிபதியிடமோ, பிரதமரிடமோ,எந்தவொருஅமைச்சர்களிடமோ கூட இல்லை. உங்களால் சரியானவற்றுக்காக எழுந்து நிற்க முடி

பக்கம் 19

## சமூக வலைத்தளங்கள் 'அவுட்'

### கண்டிக் கலவரத்தை அடுத்து அரசு அதிரடி நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 08
முகநூல் சேவைகளும், அலைபேசிகளினூடான இணைய சேவைகளும் நேற்று நண்பகலுக்குப் பின்னர் முழு அளவில் முடங்கின.

பக்கம் 03

## அவசரகாலச் சட்டத்தை உடனே நீக்கவேண்டும்!

### அமெரிக்கா வலியுறுத்து

இலங்கையில் நேற்று முன்தினம் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகாலச்சட்டம் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்

பக்கம் 18

## கண்டிக்கு அவசரமாக விரைந்தார் மைத்திரி!

கொழும்பு, மார்ச் 08
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அவசரமாகக் கண்டிக்கு விரைந்தார்.

பக்கம் 18

## மரத்துடன் மோதியது கார்; யாழ். வைத்தியர் உயிரிழப்பு

### பூநகரிப் பகுதியில் சம்பவம்



கிளிநொச்சி, மார்ச் 08
கிளிநொச்சி, பூநகரிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்து ஒன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர்

பக்கம் 18

## காணாமற்போனோரைத் தேடி மாபெரும் போராட்டம் இன்று

### முல்லைத்தீவில் நடக்கிறது

கிளிநொச்சி, மார்ச் 08
காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உற

பக்கம் 18

## கண்டி வன்முறைகளில் நேற்று 8 பேர் படுகாயம்

கொழும்பு, மார்ச் 08
கண்டியில் நேற்றுப் புதன்கிழமை மாலை இடம்பெற்ற இன வன்முறைகளால் 8 பேர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த 8 பேரும்

பக்கம் 18

## துண்டிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட மனிதத் தலை!

### கொழும்பில் பெரும் பரபரப்பு



கொழும்பு, மார்ச் 08
கொழும்பு – வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க மாவத்தைப் பகுதியில் நேற்றுக் காலை

பக்கம் 18

## மக்களை வீடுகளுக்குள் இருக்குமாறு கோரிக்கை

கண்டியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மக்களை வீடுகளுக்குள் இருக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

பக்கம் 18

## இன வன்முறைகள் கண்டியில் உச்சம்!

### ஊடரங்கு நீடிப்பு



கொழும்பு, மார்ச் 08
கண்டி நிர்வாக மாவட்டத்தில் நேற்று மாலை 4 மணி தொடக்கம் இன்று மாலை 4

பக்கம் 18

## வெளியிலிருந்து குண்டர்களை அழைத்து வந்தே இனக்கலவரம்

### அமைச்சர் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 08
வெளிப்பிரதேசங்களிலிருந்து அழைத்துவரப்பட்ட குண்டர்களைக்கொண்டே கண்டி – திகண இனக்கலவரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், இத்தரப்பினர்


பக்கம் 03

## பலவந்தக் காணாமற்போதலை தடுக்கும் சட்டம் நிறைவேறியது!

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும்

பக்கம் 18

## அமெ. பிரஜையான தமிழர் கிளிநொச்சியில் கொலை!



அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்ற தமிழர் ஒருவர் கிளிநொச்சியில் கொலை செய்யப்பட்டுள்ளார் எனக் கிளிநொச்சிப்

பக்கம் 18

## முஸ்லிம் மக்களுக்கு ஆயுதம் தாருங்கள்!

### அரசிடம் ஹிஸ்புல்லா கோரிக்கை



கொழும்பு, மார்ச் 08
முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறும் பட்சத்தில் முஸ்லிம்களின் தற்பாதுகாப்புக்காக அரசு ஆயுதங்களை வழங்க வேண்டும் என

பக்கம் 18

### இது ரகசியம் அல்ல!

எமது பத்திரிகையின் நேற்றைய ஆசிரிய தலையங்கத்தை வாசித்த, முக்கிய தமிழ் அரசியல்வாதி ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்து என் மீது சீறிப் பாய்ந்தார்.

பக்கம் 03

# நியமனத்தை எதிர்பார்த்திருக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## நாடாளுமன்றில் டக்ளஸ் நேற்று கோரிக்கை



நேர்முகத் தேர்வுக்கு தோற்றிய 676 தொண்டர் ஆசிரியர்களும் தங்களுக்கான நியமனங்களை எதிர்பார்த்துள்ள நிலையில் அவர்களுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசமிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் நடைபெற்ற கேள்வி நேரத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகின்ற சுமார் 1,050 பேருக்கான நேர்முகப் பரீட்சை கடந்த வருடம் ஜுலை மாதம் 28, 29, 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பொது நூலகக் கட்டடத்தில் மத்திய கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

நேர்முகப் பரீட்சை இடம் பெற்று சுமார் ஒரு மாதம் கழிந்த நிலையில், அவர்களில் 676 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவர்களின் 'லொக் புக்' தகுதி அடிப்படையில் 182 பேர் தெரிவு செய்யப்பட்டு, நியமனங்கள் வழங்கப்படும் எனக் கூறப்பட்டதாகவும், எனினும் இதுவரையில் எவருக்குமே நியமனங்கள் வழங்கப்படவில்லை என்றும் தெரிய வருகின்றது.

மேற்படி தொண்டர் ஆசிரியர்கள் சுமார் நீண்ட காலமாக மிகவும் பாதிப்புற்ற நிலையில் தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் பல காணப்படுகின்றமை தாங்கள் அறிந்த விடயமாகும்.

இத்தகைய நிலையில், தேர்ந்தெடுக்கப்பட்ட 676 தொண்டர் ஆசிரியர்களுமே தங்களுக்கான நியமனங்களை எதிர்பார்த்துள்ளனர்.

இந்த நிலையில், கடந்தகால யுத்த நிலைமைகள் காரணமாக ஏற்பட்டிருந்த இடப்பெயர்வுகளால் தங்களுக்குரிய 'லொக் புக்' தகுதிகளை இழந்துள்ள 494 தொண்டர் ஆசிரியர்களின் மாற்றீடு ஆவணங்களை வரவு பதிவேடு, கருத்தரங்குகளில் கலந்துகொண்ட, பரீட்சைகளில் தோற்றிய பதிவுகள், பாட விதான விடயங்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, மேற்படி 676 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து உதவ முடியுமா? மேற்படி எனது கேள்விக்கான பதிலையும், எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்களையும் கல்வி அமைச்சர் வழங்குவார் என எதிர்பார்க்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# இலங்கையின் இனவாத வன்முறைக்கு எதிராக ஜப்பானில் ஐ.நா.சபை முன்பாக ஆர்ப்பாட்டம்!



கொழும்பு, மார்ச் 08

டோக்கியோவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை காரியால யத்திற்கு முன்பாக இலங்கையின் தற்போதைய நிலவரத்தை தெரிவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜப்பான் வாழ் இலங்கையர்கள் பதாகைகளை ஏந்திய வண்ணம் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.




# இன முறுகலை ஏற்படுத்தவே விசமிகளால் ரயர் எரிப்பு



பள்ளிவாசல் நிர்வாகம் கூறுகிறது

வவுனியா மதினா நகர் பள்ளிவாசலுக்கு முன்பாக இனந்தெரியாத நபர்களால் ரயர் எரிக்கப்பட்ட சம்பவம் இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்த திட்டமிட்ட நாசகார செயல் என பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வவுனியா, மதீனாநகர் பள்ளிவாசல் முன்பாக நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் மோட்டர்சைக்கிளில் வந்த குழு ஒன்றினால் ரயர் எரியூட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மதினா நகர் பள்ளிவாசல் பகுதிக்கு பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.

இந்தச் சம்பவத்தால் மதினா நகர் கிராமத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் பதற்ற நிலைமை காணப்பட்டது.

மதினா நகர் பள்ளிவாசல் முன்பாக நடைபெற்ற ரயர் எரிப்பு சம்பவம் தொடர்பாக பள்ளிவாசல் மௌலவி எம்.எச்.எஸ். அலாவுதீன், பிரஜைகள் பொலிஸ் குழு தலைவர் முகமட் பைசல் மற்றும் மதினா நகர் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் யு. அயுப்கான் ஆகியோர் கருத்து தெரிவிக்கையில்-

பள்ளிவாசல் முன்பாக ரயர் எரிக்கப்பட்ட நிலைமையானது ஒரு நாசகார செயலாகவே நாங்கள் பார்க்கிறோம். இவ்வாறான வணக்கஸ்தலங்கள் தாக்கப்படுவது இனங்களுக்கிடையிலான முறுகலை ஏற்படுத்தும் நோக்கமே.

இந்தக் கிராமத்தில் யுத்த காலம் முதல் கூட தமிழ்-முஸ்லிம் இனங்களை சேர்ந்த மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த ஒற்றுமையை சீர்குலைக்க சில விசமிகள் திட்டமிட்டு இந்த செயலைச் செய்கின்றார்கள்.

இந்த நாட்டில் சிறுபான்மை சமூகத்திற்கான பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது. இவ்வாறான வேண்டத்தகாத சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமலிருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, மதினா நகர் பள்ளிவாசலுக்கு வருகை தந்திருந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளர் அப்துல் பாரி மற்றும் கட்சியின் இணைப்பாளர் முத்து முகமது, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கு.திலீபன் ஆகியோர் பள்ளிவாசல் நிர்வாகத்தினரை சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்துகொண்டனர்.

(க-100)

# பெண்கள் இரண்டாம் நிலையினராக இருப்பது சமூகத்தின் சாபக்கேடாகும்

உலகின் சனத்தொகையில் சரிபாதிக்கு மேலான பங்கினராக இருக்கும் பெண்கள் இரண்டாம் நிலையினராக ஆக்கப்பட்டிருப்பது மனித சமூகத்தின் சாபக்கேடாகும்.

இவ்வாறு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சமூக நீதிக்கான வெகுஜன அமைப் பின் வவுனியா மாவட்ட செயலாளர் சு.டொன் பொஸ்கோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

சமூகத்தில் கூடிய நேரம் வேலைசெய்பவர்களாக பெண்களே விளங்குகின்றனர். அலுவலக வேலை மற்றும் ஊதியம் பெறும் உழைப்புகளுடன் சம்பளம் பெறாத வீட்டுவேலையிலும் ஈடுபட்டு நாளாந்தம் 18 மணித்தியாலங்கள் வரை உழைப்பில் ஈடுபடுகின்றனர்.

நுண்கடன் என்னும் பொறியில் வீழ்த்தப்படுகின்றனர். நாட்டில் பெருகியுள்ள நுகர்வுக் கலாசாரம் பெண்களை மிகவும் பாதிக்கின்றது.

இந்தக் கலாசாரம் பெண்களையும் சிறுமிகளையும் பாலியல் நுகர்வுப் பண்டங்களாக மாற்றியுள்ளது. ஆளாக மதிப்புப் பெற்று சுதந்திர உரிமையுள்ளவளாக வாழ வேண்டிய பெண்கள் உரிமையிழந்து வாங்கவும் விற்கவும் உரிய பொருள்கள் போல ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அச்சம் நாணம் போன்ற கலாசார கோலங்களால் அச்சமூட்டப்பட்டிருக்கும் பெண்கள் மீது சுரண்டலும் குடும்ப வன்முறையும், பாலியல் வன்முறையும் அதிகரித்து வருகின்றன.

திறந்த பொருளாதாரத்தின் நுகர்வுக் கலாசாரத்தை ஒழித்து தேசிய பொருளாதாரத்தையும் உயர்ந்த தேசிய கலாசாரத்தையும் ஏற்படுத்தினால் மாத்திரமே பெண்கள் சமத்துவ உரிமை பெற்று அச்சமின்றி வாழ வழி பிறக்கும் - என்றார்.

(க-100)

# கலவரப் பின்னணியில் மஹிந்த ஆதரவாளர்கள்?

## புலனாய்வு அமைப்புகள் அறிக்கை

கொழும்பு, மார்ச் 08

கண்டி மாவட்டத்தில் தெல்தெனியப் பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் வெடிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான பொலிஸ் குழுவொன்று துணைபோயுள்ளதாக அரச புலனாய்வு அமைப்புகள், அரசுக்கு அறிக்கை அளித்துள்ளன.

கண்டியில் வெடித்துள்ள இனப்பதற்றம் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடந்த அமைச் சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள் ளது.

இதன்போதே, மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதர வாகச் செயற்படும், பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று, பதற்ற நிலையை ஊக்குவிக்கும் வகையில் செயற்பட்டுள்ளமை தொடர்பான அரச புல னாய்வு அமைப்புகளின் அறிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெல்தெனிய பொலிஸ் சப் இன்ஸ்பெக்டரும், திகண பொலிஸ் பொறுப்பதிகாரியும் மஹிந்தவுக்கு ஆதரவானவர்கள் என்றும், இவர்கள் முன்னர் தங்காலை மற்றும் சூரியவெவ பகுதிகளில் பணியாற்றியவர்கள் என்றும் புலனாய்வு அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# 71 கிலோ கேரளக் கஞ்சா பண்ணாகத்தில் சிக்கியது!

## இருவர் பொலிஸாரால் கைது



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – வட்டுக் கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்ணாகம் பகுதியில் கேரளக் கஞ்சாக் கடத்தலில் ஈடுபட்ட இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 71 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள் ளது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் பனிப்புலம் பகுதியில் இருந்து சுழிபுரத்துக்கு மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லப்படும் போதே கஞ்சாவைக் கைப்பற்றினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம் மேற்குப் பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர். இருவரில் ஒருவரிடமிருந்து 35 கிலோகஞ்சாவும், மற்றைய நபரிடமிருந்து 36 கிலோ கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து அவர்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ – 7)

# ஆபத்துமிக்க வெடிபொருள்கள் ஆரையம்பதியில் நேற்று மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 08

மட்டக்களப்பு – ஆரையம்பதியிலுள்ள வீடொன்றில் அச்சுறுத்தும் வகையிலான வெடிபொருள்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. அதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகின்றது.

ஆரையம்பதியில் தாயும் மகளும் தங்கியிருந்த வீடொன்றில் இருந்து இந்த வெடிப்பொருள்கள் மீட்கப் பட்டுள்ளன. அங்கு முப்படையினரும் வரவழைக்கப் பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த வீட்டின் வேலியொன்றில் தீவிரவாத அமைப்பொன்றின் வாசகம் எழுதப்பட்ட சுலோக அட்டையொன்றும் தொங்கவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கண்டியில் பாடசாலைகள் மறு அறிவித்தல்வரை பூட்டு

கண்டி நிர்வாக மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படும் எனக் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அறிவித்துள்ளார். உடன் நடைமுறைக்கு வரும் வகையில் கண்டி நிர்வாக மாவட்டத்தில் மீண்டும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல்வரை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் கூறினார். (ஐ)

# புத்தூரில் இன்று பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வு

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பும் கலைமதி மாதர் அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் மகளிர் தின 'பெண்கள் எழுச்சி நாள்' நிகழ்வு புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் இன்று காலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

மேற்படி அமைப்பைச் சேர்ந்த செல்வி வாஹினி கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் உட்பட பலர் சிறப்புரை ஆற்றுவர். (இ)

### சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி மாவட்டத்தில் தொலைபேசிகளினூடான இணைய சேவைகளை இடைநிறுத்து மாறு நேற்றுக் காலை முதல் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு அறிவித்தல் விடுத்திருந்த நிலையில், முகநூல் சேவைகளும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் முடக்கப்பட்டுள்ளன.

மேலதிக அறிவிப்பு வரும் வரை குறித்த இணைய சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூகங்கள், குழுக்களுக்கிடையில் கலவரத்துக்குத் தூபமிடும் வகையில் முகநூல்களினூடாகவும் இன்னபிற அலைபேசியூடான இணைய சேவைகளூடாகவும் தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றமையால் இத்தகைய தடை கொண்டு வரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகவாழ்வையும் இன ஐக்கியத்தையும் சீர்குலைக்கும் இத்தகைய முகநூல் மற்றும் அலைபேசியூடான இணைய சேவைகளை முடக்குவது சிறந்தது என்ற போதிலும், அரசு அத்துடன் நின்றுவிடாது, வதந்திகள் பரப்புவோருக்கு எதிராகவும் கலவரத்தைத் தூண்டுவோருக்கு எதிராகவும் சட்டம், ஒழுங்கின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர். (ஐ)

# வவுனியா நிலைமை; நேற்று முக்கிய பேச்சு

வவுனியா, மார்ச் 08

வவுனியாவில் சர்வமதத் தலைவர்கள் மற்றும் முப் படையினர், பொலிஸாரை அழைத்து அரச அதிபர் அவசரச் சந்திப் பொன்றை நேற்று மேற்கொண்டார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் பிற்பகல் 2 மணிக்கு அரச அதிபர் சோமரத்தின விதான பத்திரன தலைமையில் ஆரம்பமான இந்தச் சந்திப்பில், சர்வ மதத் தலைவர்கள் கலந்து கொண்டு நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஆலோசனைகளை வழங்கினர்.

வவுனியாவில் மதினா நகர் பள்ளிவாசலுக்கு முன்பாக நேற்று இனந்தெரியாதோரால் ரயர் எரிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, அவசரமாக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் இருக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனச் சர்வ மதத் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதில் பொலிஸ் அதிகாரிகள், இராணுவம், விமானப்படை, கடற்படை உயர் அதிகாரிகள், வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ – 100)

### வெளியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவையின் வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போது கலந்து கொண்டு திகண மோதல் சம்பவம் தொடர்பிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

திகண பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றில் வைத்து அனைத்துக்கட்சிகளும் ஒருமித்த எதிர்ப்பை வெளியிட்டமைக்கும், இந்த விடயத்தில் ஊடகங்கள் சர்ச்சைகளைத் தூண்டாத வண்ணம் செய்திகளைப் பிரசுரித்தமைக்கும் நாம் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள வேண் டும்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வோர் எவராக இருந்தாலும் எந்தத் தரப்பினராக இருந்தாலும் நாம் பாரபட்சம் பாராது அரசமைப்புக் கேற்ப உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதையும் இவ்வேளையில் உறுதியுடன் கூறிக்கொள் கிறோம்.

குமாரசிங்க என்ற சிங்கள இளைஞரைத் தாக்கிய 4 முஸ்லிம் இளைஞர்களும் தற்போது கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். இவர்களுக்குச் சார்பாக எந்தவொரு கருத்தையும் வெளியிடப் போவதில்லை என்று முஸ்லிம் அரசியல்வாதிகளும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இவ்வாறான ஒருசில விசமிகளின் செயற்பாட்டால் அப்பாவிப் பொதுமக்களைத்தாக்குவதை, அவர்களின் உடமைகளை அழிப்பதை எம்மால் ஒருபோதும் அனுமக்கவே முடியாது. இனவாதிகளும் அடிப்படை வாதிகளும் முஸ்லிம் சமூகத்தில் மட்டுமன்றி சிங்கள, தமி ழரிடத்திலும் தான் காணப்படுகிறார்கள். இவ்வாறான ஒருசிலரால் ஒட்டுமொத்த சமூகத்தையும் தாக்குவது எந்த வகையில் நியாயம்?

அதேநேரம், திகண பிரதேசத்துக்கு வெளிப் பிரதேசங்களிலிருந்து வாகனங்கள் ஊடாக குண்டர்கள் அழைத்துவரப்பட்டே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பதையும், இதற்கும் அப்பிரதேச மக்களுக்கும் எந்தவொரு தொடர்புமில்லை என்பதையும் இங்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக வலைத்தளங்களும் இந்தப் பிரச்சினை பெரிதாக மூல காரணமாக அமைந் துள்ளன. எனவே, இதுதொடர்பில் நாம் அனைவரும் இந்நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் சிந்தித்து செயற்படவேண்டும். – என்றார். (ஐ)

# அம்பத்தனவில் நேற்றிரவு கைக்குண்டுத் தாக்குதல்!

கண்டி – அம்பத்தன பகுதியில் நேற்றிரவு கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், கடுகஸ்தோட்ட பகுதியில் வர்த்தக நிலையங்கள் மீதும் நேற்றிரவு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*"என்ன செய்தாலும் உங்கள் பத்திரிகை இப்படி ஓர வஞ்சனை செய்யக்கூடாது. பக்கச் சார்பாகக் கருத்துக்களை முன்வைத்து உண்மைகளை மறைக்கக் கூடாது." –* என்றார்.

என்ன விவகாரம் என்று விசாரித்தேன்.

இந்த ஜனாதிபதியையும், பிரதமரையும், தென்னிலங்கை அரசையும் நம்பி சம்பந்தன் ஏமாறும் நிலைக்குச் சென்றிருப்பது குறித்து அந்த ஆசிரியர் தலையங்கத்தில் பிரஸ்தாபிக் கப்பட்டிருந்தது.

*'தென்னிலங்கையின் காலாதி காலப் போக்கை – பரவணிப் பண்பியல்பை – நன்கு புரிந்து அறிந்து வைத்துள்ள சம்பந்தன், இது போன்ற இக்கட்டு – ஏமாற்று – நிலையில்தான் விவகாரம் போய் முடியும் என்று எதிர்பார்த்து, அதற்கேற்ப ஆரம்பத்திலேயே சில காய் நகர்த்தல்களை முன்னெச்சரிக்கையாகச் செய்திருக்கலாம், செய்திருக்க வேண்டும் என்பதுதான் பலரின் ஆதங்கம்.*

*"ஆரம்பம் தொட்டே ஈ.பி.ஆர். எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், படித்துப் படித்து இந்த விடயத்தில் முன்னெச்சரிக்கை வெளியிட்டு வந்தார் என்பதும் மறக்கற்பாலதல்ல.*

*எத்தகைய தீர்வு என்பது குறித்து தென்னிலங்கையின் மூத்த அரசியல் தலைமைகளுடன் பேசி, ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்து, அதனை எழுத்தில் ஓர் உடன்பாட்டு ஆவணமாக்கி விட்டு, அதனடிப்படையில் சமரச முயற்சிகளை முன்கொண்டு செல்லுங்கள் என்று திரும்பத் திரும்ப சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறி வந்தமை, இன்றைய நிலையில் பார்க்கும்போது கட்டாயம் பின்பற்றியிருக்க வேண்டிய ஒன்றாகவே தோன்றுகின்றது."*

–இப்படி அந்தத் தலையங்கத்தில் கூறப்பட்டமைதான் அந்த அரசியல்வாதியின் சீற்றத்துக்குக் காரணம்.

*"என்ன சுரேஷ் மட்டுமா இதைக் கூறினார்? அவர் கூட இதனை ஊடக மாநாடுகளில்தான் கூறியிருப்பார். ஆனால் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே இருந்தபடி கட்சியின் பல செயற்குழுக் கூட்டங்களில் கட்சியின் சிரேஷ்ட உப தலைவராக இருந்த பேராசிரியர் சிற்றம்பலம், இளைஞரணி செயலாளராக இருந்த மன்னார் சிவகரன், மகளிர் அணிச் செயலாளராக இருந்த அனந்தி சசிதரன் போன்றோர் சம்பந்தனின் முகத்துக்கு நேரேயே பல தடவைகள் இதைக் கூறியிருக்கின்றார்கள். உங்கள் பத்திரிகை என்னதனது ஆசிரியர் தலையங்கத்தில் அந்த மூவரையும் வேண்டும் என்றே ஓரங்கட்டிவிட்டு, சுரேஷ் பிறேமச்சந்திரனை மட்டும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறது? இது சரியா? இது தர்மமா?"*

– என்றெல்லாம் பாய்ந்தார்.

"உங்கள் கருத்தும் கோபமும் மிகவும் நியாயமானவை தான். அப்படித் தவறுகள் வராமல் இனிப் பார்த்துக் கொள்கிறோம்." – என்று நான் அவரைத் தாஜா செய்தேன்.

எம் பக்கத்தில் தவறு என்றால் அதனை ஏற்று ஒப்புக் கொள்வதுடன், நைஸாக விடயத்தில் இருந்து 'ஜாகா' வாங்குவதுதான் பொருத்தமான இராஜதந்திரம் என்பது நீண்ட கால ஊடக அனுபவம் மூலம் நாம் பெற்றிருக்கும் பட்டறிவு. அதன்படி இந்த விடயத்திலும் ஜாகா வாங்கிக் கொண்டேன் நான்.

-மின்னல்-

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
பைபர் கிளாஸ் மோல்ட், பைபர் கிளாஸ் உற்பத்தி, றபர் மோல்ட் மற்றும் சிறுவர்களுக்குத் தேவையான உள்ளக, வெளியக விளையாட்டு உபகரணங்கள் தரமான முறையில் செய்து தரப்படும்.
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பெண்மையைப் போற்றுவோம்!

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ் வையகம் தழைக்குமாம்!" – என்றான் மகாகவி சுப்பிரமணிய பாரதி.

சர்வதேச மகளிர் தினமான இன்று நம் சிந்தையில் கொள்ள வேண்டிய முக்கிய கருத்து இது.

சம ஊதியம், சம வாழ்வியல் உரிமைகள் கோரி கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே உலக நாடுகள் பலவற்றிலும் மகளிர் போராட்டங்கள் நடைபெற்று வந்தன. 1910 ஆண்டு டென்மார்க்கில் நடந்த மகளிர் உரிமை மாநாட்டில் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாக அனுஷ்டிக்கும் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும், 1920 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவின் சென்.பீற்றர்ஸ் நகரில் நடந்த மகளிர் போராட்டத்தின் போது விடுக்கப்பட்ட அறிவிப்பை அடுத்தே, 1921 முதல் அது நடைமுறைக்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து 1975 ஆம் ஆண்டை மகளிர் ஆண்டாக ஐ.நா. பிரகடனம் செய்தது.

ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து மகளிருக்கு நீதியையும் சமவுரிமையையும் சமத்துவத்தையும் பெற்றுக் கொடுக்க வேண்டிய தன் குறியீடாகவே சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

வியத்தகு திசையில் உலகம் முன்னேறி,மேம்பட்டு, நவீனமயமடைந்து, ஆச்சரிய வாழ்வை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் கூட – பல புதுமைகள் தொடர்ந்து அரங்கேறி வந்தாலும் கூட – மகளிரை மதிக்கும் மாண்பில் அது முன்னேற இன்னும் எவ்வளவோ தொலைவு இருக்கின்றது என்பதுதான் யதார்த்தப் புறவுண்மையாகும்.

மகளிர் மேம்பாட்டுக்காக தீவிரமாக உழைத்து வரும் ஐ.நா., 2030 இற்கு முன்னர் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையில் சமத்துவத்தை உருவாக்கத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றது. அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளில் இது சாத்தியமா என்பது கேள்விக்குறியே. அத்தகைய சமத்துவம் பேணலுக்கான மனத் தயார் நிலைக்கு ஆணாதிக்க சமுதாயம் தானாக மாறாத வரை ஐ.நாவின் இந்த இலக்கு வெறும் கானல் நீராகவே நீடிப்பது தவிர்க்க முடியாததாகும்.

ஐ.நா. புள்ளி விவரம் ஒன்றின்படி சர்வதேச அளவில் 66 வீதப் பணியைப் பெண்களே மேற்கொள்கின்றனர். ஆனால், உலக வருமானத்தில் பத்துவீதம் மட்டுமே அவர்களுக்குக் கிடைக்கின்றது. இது ஒன்றே இந்த உலகு எவ்வளவு தூரம் ஆணாதிக்கப் பிடி என்ற கொடூரத்துக்குள் சிக்குண்டு கிடக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டு.

அண்மைக்கால அறிக்கைகளின்படி. உலகில் மூன்றில் ஒரு பகுதி பெண்கள் தமது மிக நெருங்கிய உறவினர்களாலேயே உடல் ரீதியான வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். ஐந்து பெண்களில் ஒருவர் வல்லுறவுக்கு உள்ளாகும் ஆபத்தை எதிர்கொள்கின்றார்.

மேலைத்தேசம் என்று கூறும் ஐரோப்பிய கூட்டமைப்பிலேயே 55 வீதமான பெண்கள் தங்களுடைய 15 வயதில் இருந்து ஒரு முறையாவது பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர் என்றால் உலக நிலைமையை எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

பெண்களுக்கு எதிரான வன்முறையும் அடக்குமுறையும் இரண்டு மட்டங்களில் கட்டவிழ்கின்றன. ஒன்று குடும்ப மட்டம். மற்றையது சமூக மட்டம்.

தாயாக, மனைவியாக, தங்கையாக, மகளாக நம் உறவு முறையில் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்கள். உலகின் ஒவ்வொரு மனிதனின் உயிர்ப்பின் தோற்றமும் – ஜனனமும் – ஒரு பெண்ணின் கருவறையில்தானே நிகழ்கின்றது?

அன்னையை தெய்வமாகவும், தெய்வங்களை அன்னை வடிவிலும் வணங்கும் நாம், நமது அன்னையையும் உள்ளடக்கிய மகளிர் சமுதாயத்தை வணங்கி மதிக்காவிட்டாலும் குறைந்த பட்சம் சமவுரிமை, சம அந்தஸ்து கொடுத்து சமதையாகப் போற்றுகின்றோமா என்பதை ஒவ்வொரு ஆண் மகனும் தனக்குத்தானே கேட்டுக் கொள்வானாயின் மகளிர் சமவுரிமை ஓரளவு மேம்பட வாய்ப்பு ஏற்படும்.

மனுக்குலத்தில் அரைப் பங்கினர் மகளிர். அவர்களாலேயே மனித குலம் மேம்படுகின்றது. விருத்தியடைகின்றது. சுபீட்சம் பெறுகின்றது. அத்தகைய மகளிரை மதித்தால்தான், மாண்புறப் போற்றினால்தான், சமத்துவமாகப் பேணினால்தான், சமூக மாற்றமும், சமுதாய மறுமலர்ச்சியும் சாத்தியமாகும்.

பெரும்பான்மை குடும்பங்களின் மைய விசையாகவும், அச்சாகவும் இருப்பவள் பெண்ணே. அந்தச் சுமையை சுமந்த படியேதான் ஆணாதிக்க அடக்குமுறையையும் அவள் எதிர்கொள்கின்றாள்.

குடும்ப வாழ்விலும், சமூக ஒருமைப்பாட்டிலும் மையமாக விளங்கும் மகளிரைச் சமத்துவமாக மதித்து, சமவுரிமையை வழங்கி, அவற்றை உறுதிப்படுத்தி, அவர்களின் மாண்பைப் பேணினால்தான் குடும்பம், சமூகம், நாடு, உலகம் மேன்மையுறும். மனுக்குலத்தின் சிறப்பு ஓங்கும். சர்வதேச மகளிர் தினமான இன்று அதற்காக பிரதிக்ஞை கொள்வோம்.

# அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலர் இலங்கை வருகிறார்



கொழும்பு, மார்ச் 08

அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலர் ஜெப்ரி பெல்ட்மன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் இதனைத் தெரிவித்தார்.

நாளை இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலர் ஜெப்ரி பெல்ட்மன், எதிர்வரும் 11 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார் என்றும் அவர் கூறினார்.

இதன்போது, ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் உள்ளிட்ட தலைவர்களையும் மூத்த அதிகாரிகளையும் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள நிலையிலும், அவசர காலச்சட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும், ஐ.நா. உதவிச்செயலரின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

எனினும், இந்தப் பயணம், அவசரகாலச்சட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு முன்னரே திட்டமிடப்பட்டது என்றும், இலங்கைக்கும் ஐ.நாவுக்கும் இடையில் தொடருகின்ற ஒத்துழைப்புகளை அடிப்படையாகக் கொண்டது என்றும்,ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலர் ஜெப்ரி பெல்ட்மன் இலங்கைக்குமேற்கொள்ளவிருக்கும் மூன்றாவது பயணம் இதுவாகும்.

இவர் ஏற்கனவே, 2015 இலும், 2017 பெப்ரவரியிலும், இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் அம்புலன்ஸ் சாரதிகள் பணிப் பகிஷ்கரிப்பு!

வவுனியா, மார்ச் 08

வவுனியாவில் அம்புலன்ஸ் சாரதிகள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

வடமாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கத்தைச் சேர்ந்த சாரதிகள், வடமத்திய மாகாண சுகாதார திணைக்களச் சாரதிகளுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை கண்டித்து பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனடிப்படையில் அனுராதபுரம் மாவட்ட சுகாதாரத் திணைக்களம் சார்ந்த 30 சாரதிகளுக்கு வேறு அரசதிணைக்களங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, இடமாற்றத்தைதிரும்பப் பெறக் கோரியும், அம்புலன்ஸ் மற்றும் சுகாதாரத் திணைக்களம் சார்ந்த வாகனங்களின் சாரதிகளை நிரந்தரமாக சுகாதார சேவைக்குள் உள்வாங்கக் கோரியும், நாடளாவிய ரீதியில் நடைபெற்றுவரும் அம்புலன்ஸ் சாரதிகளின் பணிப் பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக, வவுனியா உட்பட வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தை சேர்ந்த 222 சாரதிகள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், அனுராதபுரம் மாவட்டத்திற்குட்பட்ட சுகாதாரத் திணைக்களத்தை சார்ந்த 11 சங்கங்கள், அம்புலன்ஸ் சாரதிகளின் பணிப் பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக அகில இலங்கை சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அம்புலன்ஸ் சாரதிகள்பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டாலும், அவசர சேவைகள் வழமைபோல் முன்னெடுக்கப்படும் என வடமாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது.

(க)

# மாகாண சபைத் தேர்தல் சட்டம்; எதிரான 7 மனுக்களும் தள்ளுபடி

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஏழு மனுக்களையும் உயர்நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

இந்த மனுக்கள் ஏழும், பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், நீதியரசர்களான சிசிர டி அப்று, நளின் பெரேரா ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டது.

கடந்த வருடம் செப்ரெம்பர் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக முன்னாள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உட்பட சிலரால் ஏழு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

ஜி.எல்.பீரிஸின் மனுவில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேப்பிரிய, அவ்வாணைக்குழுவின் அங்கத்தவர்கள், சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

அந்த மனுவில், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தியும் வடக்கு, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கு தேர்தலை நடத்துமாறு உத்தரவிடுமாறும் அவர் கோரியிருந்தார்.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் அடிப்படை உரிமைகள் மனுவில் –

இந்தத் திருத்தச் சட்டமூலமானது, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட முறைமை தவறானது என்றும் அந்தத் திருத்தத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறும் கோரப்பட்டிருந்தது.

அந்த மனுவில், சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, சபாநாயகரால் கையொப்பமிடப்பட்டுள்ள சட்டத்தின் பிரகாரம் செயற்படாமல், ஏற்கனவே அமுலிலிருந்த, 1988 இலக்கம் 2 மாகாண சபைகள் மற்றும் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் செயற்படுமாறு உத்தரவிடுமாறே, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது . (ஐ)

## நாளை

09.03.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : கேட்டை மாலை 5.38 வரை
திதி : ஸப்தமி காலை 5.38 வரை
சுபநேரம் : 6.24 – 7.54 வரை
இராகுகாலம்: 10.54 –12.24 வரை

# இலங்கையில் பாதுகாப்புத்துறை மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 08

கண்டி மற்றும் அம்பாறையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாத தாக்குதல்களின்போது பாதுகாப்புத்துறை அசமந்தப் போக்குடன் செயற்பட்டுள்ளது. இதனால், பாதுகாப்புத்துறை மீது வைத்திருந்த நம்பிக்கையை மக்கள் இழந்து விட்டனர் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் தோன்றியுள்ள அசாதாரண நிலை தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிங்கள சகோதரர்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக இன வெறுப்பு பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெறப்போவதை உளவுத்துறை முன்கூட்டியே அறிந்து, அதனை தடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று அமைச்சர் ரவூப் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத்தெரிவித்த பௌத்த மதகுருமார்கள், முஸ்லிம்கள் மீதுள்ள தப்பபிப்பிராயங்களை களைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்தினர்.

முஸ்லிம்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்காக வெளியில் பல சிங்களக் குழுக்கள் இயங்குகின்றன. அவ்வாறானவர்களே வெளியிலிருந்து வந்து இந்த வன்முறைகளில் ஈடுபட்டனர் என்பதை சுட்டிக்காட்டினர்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்களான எஸ்.பி. திசாநாயக்க, பைசர் முஸ்தபா, லக்ஷ்மன் கிரியெல்ல, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, பிரதியமைச்சர் பைசால் காசிம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். தௌபீக், லக்கி ஜயவர்தன, இராணுவ உயரதிகாரிகள், பௌத்த மதகுருமார்கள், கண்டியிலுள்ள முக்கியமான மௌலவிமார், கிறிஸ்தவ மத குருமார், சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, வன்முறை இடம்பெற்ற களத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் பாதுகாப்பு தரப்பினருடன் கலந்தாலோசித்து பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவ தற்கான ஏற்பாடுகளைமேற்கொண்டுள்ளார்.

தம்மிடம் 200 படையினரே இருக்கின்றனர் என்றும் ஆயிரக் கணக்கில் வருகின்ற கலகக்காரர்களை கட்டுப்படுத்துவதற்கு தம்மிடம் போதியளவு படையினர் இல்லையென அங்கிருந்த பொலிஸார் கூறியுள்ளனர்.

இதனையடுத்து பிரதமரை தொடர்புகொண்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம், வெளி மாவட்டங்களிலுமிருந்து 2000 இராணுவத்தினரை உடனடியாக கண்டி மாவட்டத்துக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை மடவளை பிரதேசத்திலும் பதற்றநிலை தோன்றியது.அந்தஇடத்துக்குச் சென்ற அமைச்சர்ரவூப்ஹக்கீம், அச்சம் நிலவும் பிரதேசங்களில் பொலிஸாரை நிறுத்தி பாது காப்பைப் பலப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, திகண பிரதேசத்தில் இனவாத தாக்குதலால் காயமடைந்து கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள, மரணமடைந்த அப்துல் பாஷிதின் சகோதரர் மற்றும் பாஸில் ஆகியோரை அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதேவேளை, பாதுகாப்புத் துறை மீது வைத்திருந்த நம்பிக்கையை மக்கள் இழந்துவிட்டனர் என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

*கண்டியில் பல பகுதிகளிலும் பாதுகாப்பு தீவிரம்:*

# கவச வாகனங்களுடன் இராணுவம் ரோந்து





கண்டி, மார்ச் 08

இலங்கையின் மத்திய மாகாணத்தின் தலைநகர் மாவட்டமான கண்டியில் பல பகுதிகளில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோருக்கும் மேலதிகமாக இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு யுத்த சூனியப் பிரதேசமாக கண்டி நகரம் காணப்படுகிறது.

திகன மற்றும் தெல்தெனிய ஆகிய இடங்களில் மிகவும் இறுக்கமான பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறாவண்ணம் முழு நேர கண்காணிப்பு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், கண்டியில் கவச வாகனங்களுடன் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# கொரிய மொழி தேர்ச்சி பரீட்சைக்கு 22 ஆயிரத்து 551 பரீட்சார்த்திகள்!



கொழும்பு, மார்ச் 08

இம்முறை கொரிய மொழி தேர்ச்சி பரீட்சைக்கு 22 ஆயிரத்து 551 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

நிர்மாணத்துறையின் கீழ், 3 ஆயிரத்து 424 பேர் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் மே மாதம் 4ஆம் திகதி வரை பரீட்சைக்குத் தோற்றுவார்கள்.

தயாரிப்புத் துறையில், தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 19 ஆயிரத்திற்கும் மேற்பட்டதாகும்.

இதற்கான பரீட்சை மே மாதம் 25 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி வரையில் நடைபெறுமென்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு பரீட்சைக்கான பரீட்சார்த்திக்கும் பரீட்சைநடைபெறும்தினம், காலம் மற்றும் பரீட்சை மத்திய நிலையம் தொடர்பான விடயங்களை பணியகத்தின் இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# குறைவடைந்துள்ள சிறுவர் திருமணம்

சிறுவர் திருமணங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்திருக்கின்றன என யுனிசெப் அமைப்பு அறிவித்துள்ளது. இது வரவேற்கத்தக்க முயற்சியாகும் என்றும் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த பத்து வருடங்களில் இரண்டரைக் கோடி சிறுவர் திருமணங்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன என யுனிசெப் அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்சமயம் 18 வயதிற்கு உட்பட்ட ஐந்து சிறுமிகளில் ஒருவர் திருமணம் செய்து வைக்கப்படுகிறார்.

கடந்த தசாப்தத்தில் 18 வயதிற்கு உட்பட்ட நான்கு சிறுமிகளில் ஒருவர் திருமணம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விசுவாசமே வெல்லும்

“நான் உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன் இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை” இயேசு நசரேத்து நகரில் கூறிய வார்த்தையிது.



**தவக்கால சிந்தனை**

உங்கள் வாழ்விலும் பல விடயங்களில் இவற்றை கண்டிருப்பீர்கள். உங்களில் பலர் சொந்த ஊரில் பல நல்ல விடயங்களில் முன்னின்று உழைத்தாலும் குறைகள் குற்றங்கள். அட இவரா..? எங்களுக்குத் தெரியாதா இவரைப்பற்றி...? என முழுவிடயங்களையும் அலட்சியப்படுத்தி விடுவார்கள். கவலைப் படாதீர்கள் உங்களுக்கு மட்டுமல்ல தச்சனின் மகன்தானே இவர் என இயேசுவையே கொச்சைப் படுத்திய உலகம்தான் இது.

இன்று பல விடயங்களிலும் அந்நியர் சொல்வதைக் கேட்டு மாய உலகை ரசிக்கும் மக்களிடம் உங்கள் பணிகள் உணர காலம் எடுக்கும் அதற்காக உங்கள் மனதை தளர விடாது இறைபற்றுடன் சமூக அநீதிகள் வாழ்ந்து உண்மைகளை உணர வைக்க உங்கள் செயல்களைத் தொடர்ந்து செய்யுங்கள். இயேசு ஒருமுறை கூறினார். ‘ எனக்காக அழவேண்டாம் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். இன்று இறை இயேசுவின் பாடுகள் மரணம் பற்றி மனதுருகி வழிபாடுகள் நடத்தும்போது உங்கள் பிள்ளைகளின் நிலைகளை எண்ணி அவர வருக்கு ஏற்படும் சாவல்களை எண்ணி கவலைப்படுங்கள்.

உங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காக சமூகச் சீரின்மையைக் கண்டும் காணாதவராகி விடாதீர்கள். கைலஞ்சம், போலிமாயையால் பிள்ளைகளை தவறான வழியில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் மௌனித்து இராது வெளிப்படுத்த, குரல் கொடுக்க முன் வாருங்கள் தவத்தின் காலம் தர்மத்தை மட்டுமல்ல உங்கள் பிள்ளைகளின் எதிர்காலமும் இறை பாதையில் பயணிக்க இறை நம்பிக்கையுடன் செயல்பட முன் வாருங்கள்.

செ.யோசப்பாலா

# ஏறாவூரில் மனித சங்கிலிப் போராட்டம்





ஏறாவூர், மார்ச். 08

முஸ்லிம் சமூகத்திற்கெதிராக அம்பாறை, கண்டி மாவட்டத்தின் திகண, தெல்தெனிய உள்ளிட்ட பல பிரதேசங்களில் தூண்டிவிடப்பட்டுள்ள வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவுக்கும் முகமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகர பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை மனித சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது.

ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் ஜம்மிய்யத்துல் உலமா சபையின் அழைப்பின் பேரில் இந்த மனித சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் கலந்து கொண்டோர் இந்த நாட்டின் சுதந்திரம், பொருளாதாரம் பாதுகாப்பு உட்பட தொன்று தொட்டு முஸ்லிம்கள் ஆற்றிவரும் பங்களிப்பு தொடர்பாகவும் மற்றும் சகல இனங்களுக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் சமத்துவமாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் சட்டம் ஒழுங்கு பாகுபாடின்றி நிலை நாட்டப்பட வேண்டியதை வலியுறுத்தியும் பதாகைகள் ஏந்தியிருந்தனர்.

(ப)

## மருதமுனையில் 17 பேர் கைது

மருதமுனையில் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட 17 பேர் கல்முனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் இனவாதச் செயல்களைக் கண்டித்து நேற்றுமுன்தினம் மருதமுனையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதுடன், கண்டன ஆர்ப்பாட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இருந்து 8 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 7 சைக்கிள்கள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொதுச் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியமை, போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறித்த 17 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர் என அப்பகுதி பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவி பொதுமக்கள் எனவும், அவர்களை உடனடியாக விடுவிக்குமாறும் மருதமுனை பிரதேசத்தில் உள்ள சட்டத்தரணிகள் பொலிஸாரிடம் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

## வவுணதீவில் தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு தொழில் உபகரணங்கள்



மட்டக்களப்பு, மார்ச் 08

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேசத்தில் கைத்தொழில் மேம்பாட்டுக்கென ஒரு தொகுதி தொழில் உபகரணங்கள் தெரிவுசெய்யப்பட்ட கிராம மக்களுக்கு பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலியால் வழங்கப்பட்டுள்ளன.

கிராமிய பொருளாதார அமைச்சால், கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வவுணதீவு பிரதேச செயலகத்தில் இந்த தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இப்பிரதேசத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 15 கிராமங்களுக்கு சுமார் 10 இலட்சம் பெறுமதியான தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வறுமை நிலையிலுள்ள குடும்பங்களின், குடும்பபொருளாதாரத்தை உயர்த்தி அவர்களை வலுப்பெறச் செய்யும் நோக்குடன் இக் கிராமிய அபிவிருத்திநிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இத் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ரி.நிர்மலராஜ், கிராமிய பொருளாதார அமைச்சின் இணைப்புச் செயலாளர் ரீ.லோகநாதன், பிரதியமைச்சரின் வவுணதீவு பிரதேச இணைப்பாளர் கே.மூர்த்தி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட கிராம மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பாதணி அணிந்து வராததால் மாணவனுக்கு ஏற்பட்ட நிலை

மட்டக்களப்பு - தாழங்குடாவில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் மாணவன் ஆசிரியரால் தாக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

தாழங்குடா விநாயகர் வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி பயிலும் இன்பராஜா சகீர்தன் என்ற மாணவனே நேற்று ஆசிரியர் ஒருவரால் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பாடசாலைக்கு வந்த மாணவன் பாதணி அணிந்து வரவில்லையென ஆசிரியர் ஒருவர் மாணவனைத் தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இதுதொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

## தீக்குளிக்கப் போகிறேன் என வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது

### கோடீஸ்வரன் எம்.பி. கண்டனம்

சமூகவலைத்தளங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தீக்குளிக்க போகிறார் என வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அம்பாறை அக்கரைப்பற்றில் தமிழர்கள் மீது தாக்குதல் நடந்தால் அக்கரைப்பற்று மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்னால் தீக்குளிப்பேன் என நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் ஊடகங்களுக்கு செய்தி வெளியிட்டார் என நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முகநூல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த முகநூலில் வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிட்ட முகநூலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் இந்தச் செய்தி தனது நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை தனது சிறப்புரிமையும் மீறப்பட்டுள்ளது, இந்தச் செய்தி தொடர்பாக ஜனாதிபதி, சபாநாயகர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் முறைப்பாடு ஒன்றை மேற்கொள்ளவுள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் ஓர் இக்கட்டான சூழ்நிலையில் இன முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையிலான செய்திகளை வெளியிடுவது சமூகப் பொறுப்பற்ற செயலாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ப)



# இலங்கையில் தங்கியுள்ள தங்கள் மக்களுக்கு பாதுகாப்பு எச்சரிக்கை விடுத்தது அமெரிக்கா!

கொழும்பு, மார்ச் 08

இலங்கையில் தங்கியுள்ள அமெரிக்க குடிமக்களுக்கான பாதுகாப்பு எச்சரிக்கை அறிவிப்பை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டு வரும் வன்முறைகளைக் கருத்தில் கொண்டே, இலங் கையில் தங்கியுள்ள அமெரிக்க குடிமக்களுக்கு இந்தப் பாதுகாப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




தொடரும் சமூக பதற்ற நிலையால், இலங்கை அரசு அவசரகாலச்சட்டத்தை பிரகடனம் செய்துள்ளதுடன், கண்டி மாவட்டம் உள்ளிட்ட சில இடங்களில் ஊரடங்குச் சட்டத்தையும் பிறப்பித்துள்ளது.

அடுத்த சில நாள்களில் மேலும் சம்பவங்கள் நிகழும் சாத்தியங்கள் உள்ளன. உள்ளூர் ஊடகங்களின் அறிவிப்புகளை கவனத்தில் கொள்ளுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் இந்த எச்சரிக்கை, இலங்கையின் சுற்றுலாத் தொழிற்றுறைக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டம் என்பனவற்றினால், சுற்றுலாத்துறைக்கு பாதிப்பு இருக்காது என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

## நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் இருந்து இன்று முதல் வீதி ஒழுங்கு நிரல் நடைமுறை

பத்தரமுல்ல நாடாளுமன்ற சுற்றுவட்டத்திலிருந்து இன்று முதல் மேலதிக வீதி ஒழுங்கு நிரல் நடைமுறை இடம்பெற வுள்ளது.

பத்தரமுல்ல நாடாளுமன்ற சுற்றுவட்டத்திலிருந்து ராஜகிரிய மேம்பாலம் ஊடாக ஆயுர்வேத வைத்தியசாலை சந்தி வரையிலும் பொரளை சந்தி வழியாக மேலதிக வீதி நிரல்களை நடைமுறைப்படுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இது இன்று முதல் வார நாள்களில் காலை 6.30 இலிருந்து காலை 9.00 மணி வரை நடைமுறையில் இருக்கும். பத்தரமுல்லயில் இருந்து வரும் வாகனங்களுக்கு பொல்துவ சந்திக்கு அருகிலுள்ள மாற்றுவழியில் பிரவேசிக்க முடியும்.

இதேபோன்று நாடாளுமன்ற வீதி ஊடாக வரும் வாகனங்கள் ஸ்ரீஜயவர்த்தனபுர பிரதான வீதியில் அத்துல்கோட்டே சந்தியின் ஊடாக பிரவேசிக்க முடியும்.

## இலங்கை அலங்கார மீன்களுக்கு சர்வதேச ரீதியில் கூடுதல் கேள்வி

இலங்கையில் வளர்க்கப்படும் அலங்கார மீன் உள்ளிட்டவற்றுக்கு சர்வதேச ரீதியில் கூடுதல் கேள்வி நிலவுகின்றது.

இதனால், உற்பத்தியாளர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்கான வேலைத் திட்டத்தை நாரா நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இதன் கீழ் பயிற்சி பெற்ற 43 பேருக்கு இந்த பணிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணத் தொகுதியை நாரா நிறுவனம் வழங்கியுள்ளது. இந்த உபகரணத் தொகுதியின் பெறுமதி 5 லட்சம் ரூபாவாகும்.

## மலையகத்தில் இளம் குடும்பஸ்தர் செவ்வாயிரவு அடித்துக் கொலை!



கொழும்பு, மார்ச் 08

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரேக்லி தோட்டத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வீட்டிற்கு செல்லும் வழியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தனை கிரேக்லி தோட்ட தொழிற்சாலையில் உதவி உத்தியோகத்தராக பணி புரியும் இந்தக் குடும்பஸ்தர், தனது வீட்டுக்கும் பத்தனை பொலிஸ் நிலையத்திற்கும் இடையில் வீட்டிலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் கிறேக்லி தோட்டத்தைச் சேர்ந்த எஸ்.திருச்செல்வம் வயது 38 என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வேலைக்கு சென்று விட்டு இரவு 9 மணி வரை வீட்டுக்கு வராததால் உறவினர்கள் இவரைத் தேடிச்சென்றுள்ளனர். இதன்போதே இவர் கொலை செய்யப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டபோதும், சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இந்த நபரின் உடலம், கொட்டகலை வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளதுடன், ஹட்டன் நீதி வானின் மேற்பார்வையின் பின் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டது.

பின்னர் நுவரெலியா கைரேகை அடையாளப் பிரிவின் பரிசோதனையை அடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## தேசிய வெசாக் தின வைபவம் ஏப். 28 இல்



கொழும்பு, மார்ச் 08

தேசிய வெசாக் தின வைபவம் இம்முறை ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி பிங்கிரிய ரஜமஹா விஹாரையில் இடம்பெறும் என்று புத்தசாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச வெசாக் உற்சவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி இடம் பெறும்.

இம்முறை வெசாக் நோன்மதி தினம் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி கொண்டாடப் படுகிறது.

ஆள் மனதின் தூய்மை நிலை பேறான மன அமைதிக்கு வித்திடும் என்பது இம்முறை வெசாக் பண்டிகைக்கான பிரதான தொனிப் பொருளாகும்.

வெசாக் தினத்தை முன்னிட்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நாடளாவிய ரீதியில் பல பௌத்த மத நிகழ்வுகளும் தான சாலைகளும் ஒழுங்கு செய்யப்படுமென்று புத்தசாசன அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி வெசாக் வாரம் ஆரம்பமாகும்.

குருநாகல் மாவட்டத்தில் உள்ள அனைத்து விஹாரைகளையும் புனரமைத்து அபிவிருத்தி செய்யும் விசேட வேலைத்திட்டமொன்றும் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்த ஏதுவான விடயங்களை கூறுகிறது அரசு

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவை செயல்வலுப்படுத்தி மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுடன் ஒரு வார காலத்திற்கு நாடு முழுவதும் அவசர கால நிலை ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அவசரகால நிலையை பிரகடனப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்த விடயங்கள் என அரசு குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

★ கடந்த இரு வாரங்களாக இடம் பெற்றுள்ள குழப்பமான மற்றும்சட்டவிரோதசெயற்பாடுகள்.

★ அத்தகையசம்பவங்களால் ஏற்பட்டுள்ள உயிர் மற்றும் சொத்துக்களின் இழப்பு.

★ அத்தகையசம்பவங்களால் இனங்கள் மற்றும் சமயங்களுக்கிடையே குழப்பமான, அமைதியற்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளமை.

★ சொத்துக்கள், வணக்கஸ்தலங்கள், போக்குவரத்து வசதிகள் போன்றவற்றிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல்களால் ஏற்பட்டுள்ள இழப்புக்கள்.மேற்கூறப்பட்ட சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுதல்.

★ மேற்படி நிகழ்வுகள் வன்முறை சூழ்நிலையில் கட்டமைக்கப்பட்ட குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை.

இந்த நிலைமைகளை சீர் செய்வதற்காக மேற்கொள்ளப் படவேண்டிய அத்தியாவசிய நடவடிக்கையாக மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுடன் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் இரண்டாம் பிரிவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, பாதுகாப்பான சூழலை மீண்டும் உறுதி செய்தல், பொதுமக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதுடன் அத்தியாவசிய தேவைகளையும் சேவைகளையும் வழங்குதல் மற்றும் அமைதி நிலையை ஏற்படுத்தல் போன்ற காரணங்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுடன் ஒருவார காலத்திற்கு பொதுமக்கள் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவினை செயல்வலுப்படுத்தி அவசர கால ஒழுங்கு விதியை அமுல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு அவசரகால நிலை அமுல்படுத்தப்படுவதனால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளின் மூலம் தற்போதுள்ள நிலைமைகளை சீர்படுத்த தேவையான சட்ட அதிகாரங்கள் இலங்கை பொலிஸுக்கும் முப்படையினருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

ஏதேனும் சட்ட விரோத நடவடிக்கைகளோ அல்லது இன மற்றும் சமய ரீதியான அமைதியற்ற சூழ்நிலைகளோ அல்லது அவற்றை ஏற்படுத்தும் நபர்களோ இனங்காணப்படுவாராயின் அவர்களது இன, மத அடையாளங்களையோ அல்லது கட்சி, நிற அரசியல் தொடர்புகளையோ கருத்திற்கொள்ளாது பக்கச்சார்பற்ற துரித நடவடிக்கைகளை அவர்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி பாதுகாப்புத் துறையினருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்த ஒழுங்கு விதிகளை செயற் படுத்தும்போது அமைதியாகவும் நேர்மையாகவும் மக்களின் நலனுக்கும் அவர்களது அன்றாட வாழ்க்கைக்கும் இடையூறுகள் ஏற்படாதவண்ணம் செயலாற்றுமாறும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறாத வகையில் செயற்படுமாறும் பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் ஜனாதிபதி விசேட அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

## போலி தகவல்களை பரப்புபவர்களுக்கு எதிராக அவசர கால சட்டம் பிரயோகிக்கப்படும்

சமூக வலைத்தளங்களில் போலியான தகவல்களை பரப்பும் நபர்களுக்கு எதிராக அவசர கால சட்டம் பிரயோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உடன் அமுலுக்கு வரும்வகையில் 10 நாள்களுக்கு அவசர கால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், போலி பிரசார மற்றும் இனவாத பிரசாரங்களை முன்னெடுப் பவர்களும் கைது செய்யப்படவுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. இதற்காக விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பேஸ்புக், வட்ஸ்அப், வைபர் மற்றும் மெசென்ஜர்களில் போலியான தகவல்களை பரப்பும் குழுக்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இனவாதம் அல்லது போலி பிரச்சாரங்களை வெளியிட்டமை உறுதி செய்யப்பட்டால் அவசரகால சட்டத்தின் கீழ் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி ராசி பலன்
(08.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 24 ஆம் நாள் வியாழக்கிழமை ஸப்தமித்திதி.பி.இ. 3.45 மணி வரை பின்னர் அஷ்டமி. நட்சத்திரம். அனுஷம் இரவு 12.45 மணி வரை பின்னர் கேட்டை. சித்தயோகம் இரவு 12.45 மணி வரை பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *பகல் 01.51 மணி முதல் 3.20 மணி வரை*
**சுபநேரம்** - *காலை 07.48 மணி முதல் 9.18 மணி வரை*
**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மாசி மாத தேய்பிறை ஸப்தமி.*
**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *அனுஷம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** சஞ்சலமான நாள். மனம் குழம்பிய நிலையில் இருக்கும். பணவரவு குறையும். தேகசுகம் பாதிப்படையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். எண்ணிய காரியங்கள் தடை, தாமதத்தைக் காட்டும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். பெண்கள் சுயதொழிலில் ஆக்கபூர்வ முன்னேற்றம் அடைவார்கள்.

**கடகம்** அனுகூலமான நாள். பொருளாதாரம் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதாக இருக்கும். குடும்பத்தில் நெருக்கம்,பாசம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டாகும்.

**சிம்மம்** கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வரத்தாமதமாகும். எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில் இடம் கிடைக்கும். வீடு கட்டும் பணி விரைந்து முடியும். தொழிலில் அலைச்சலும் வெறுப்பும் உண்டாகும்.

**கன்னி** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும். தேகசுகம், குடும்ப சுகம் ஓரளவு சீராக இருக்கும்.

**துலாம்** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப உறவு மேலோங்கும். செய்தொழில் முன்னேற்றம் அடையும். குடும்பச் சொத்துப்பிரச்சினை சுமுகத் தீர்வடையும்.

**விருச்சிகம்** அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். பூர்வீகச் சொத்துக்கள் வந்து சேரும். சிலருக்கு அரசாங்க வேலை கிடைக்கும். வெளிநாட்டு உறவுகளிடமிருந்து நற்செய்திகள் வந்து சேரும்.

**தனுசு** சலனம் மிகுந்த நாள். பணவருவாய் குறையும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும். உத்தியோகத்தில் கவனக்குறைவு உண்டாகும்.

**மகரம்** இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். சிலர் குடும்பத்துடன் சேர்ந்து சுற்றுலாப்பயணம் செல்வார்கள்.

**கும்பம்** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். வெளிநாட்டு வர்த்தக தொடர்பில் வருமானம் வளமாக இருக்கும்.

**மீனம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். சிலருக்குப் புதிய வேலை வாய்ப்பு கிடைக்கும். சொத்துக்கள் தடையின்றி வந்து சேரும்.

**சந்திராட்டம நாள்: அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கரு மங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# திகண சம்பவம் தொடர்பாக அமைச்சர் மங்கள கருத்து



கொழும்பு, மார்ச் 08

இனங்களுக்கிடையே மோதலை ஏற்படுத்தும் நபர்களுக்கு பிணை வழங்கக் கூடாது.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு தலைமை தாங்குவோரின் பிரஜாவுரிமையை இரத்துச் செய்யவேண்டும் என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

திகண மற்றும் தெல்தெனிய பிரதேசங்களில் இடம்பெற்ற நிலைமை தொடர்பாக அமைச்சர் மங்களசமரவீர இந்த விடயத்தை தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (க)

# தேங்காய்க்கு விலை நிர்ணயம்

தேங்காய்க்கான உயர்ந்த பட்சசில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு தேங்காயின் உயர்ந்தபட்ச சில்லறை விலை 75 ரூபாவாகும்.

உயர்ந்தபட்ச விலையை விட கூடுதலான விலைக்கு தேங்காயை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெங்கு சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கபில யக்கந்தலாவ தெரிவித்துள்ளார்.

நுகர்வோருக்கு தேவையான தேங்காய் நாட்டில் காணப்படுகின்றது. இதனால், கூடுதலான விலைக்கு தேங்காயை கொள்வனவு செய்ய வேண்டிய தேவை கிடையாது.

சில வர்த்தகர்கள் நுகர்வோரின் பணத்தை சுரண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். சில இடங்களில் 100 ரூபாவுக்கு தேங்காய் விற்பனை செய்யப்படுகிறது. இதுபற்றிய அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக தெங்கு செய்கை சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கூடுதலான விலைக்கு தேங்காயை கொள்வனவு செய்யும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கிறது. இதற்கமைய, அவர்களுக்கு எதிராக விலைக் கட்டுப்பாட்டுச் சபையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் , கூடுதலான விலைக்கு தேங்காயை விற்பனை செய்வோரை இனங்காணும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

### மத்திய சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில்

# தேசிய சுகாதார நல கண்காட்சி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

**புதன்கிழமை முதல் ஞாயிறு வரை**

மத்திய சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய சுகாதார நல கண்காட்சி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை முதல் ஞாயிறு வரை- 3 தினங்கள் முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். நுழைவு இலவசம்.

வருகை தரும் அனைவருக்கும் மருத்துவ பரிசோதனைகளுடன் கூடிய மருத்துவ அறிக்கைகளும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு சுகாதாரம் தொடர்பில் அவசியமான விழிப்புணர்வுகள், உடல் நலம் தொடர்பில் முக்கியமாக அறிந்திருக்கக் கூடிய விளக்கங்கள் இந்த கண்காட்சிகளின் மூலம் விளங்கப்படுத்தப்படவுள்ளன. மேலும் நோய்த்தடுப்பு முறைகள் தொடர்பாகவும் மருத்துவ சேவைகளின் வளர்ச்சிஅவற்றின் சேவைகள் தொடர்பாகவும் மக்கள் அறிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

10 மணி முதல் மாலை 6 மணி வரை இடம்பெறவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கலந்து கொள்ளவுள்ளார் என சுகாதார அமைச்சின் உதவிப் பொது முகாமையாளர் அமல் ஹார்ஷாடீ சில்வா தெரிவித்துள்ளார். (இ)

## அத்தியாவசியப் பொருள்களை களஞ்சியப்படுத்தும் வேலைத்திட்டம்

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அத்தியாவசிய உணவுப் பொருள்களை களஞ்சியப் படுத்தும் விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மட்ட வியாபாரிகளுக்கு நேர காலத்துடன் அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கும் என்று அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் நிஹால் செனிவிரட்ண தெரிவித்துள்ளார்.

சதொச கூட்டுறவு விற்பனை நிலையம் என்பன வற்றிலும் தேவையான பொருள்களை களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# நாளை விவாத அரங்கம்

## யாழ் பிரதேச செயலக மண்டபத்தில்

யாழ்ப்பாணப் பிரதேச கலாசார அதிகார சபையின் கலை கலா சார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் "நாநலமென்னும் நலனுடைமை" செந்தமிழால் அறம் வளர்ப்போம் விவாத அரங்கம்-

நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும்.

தலைப்பு: "நயத் தகு நற்றமிழ் வாழ்வுக்கு மிகவும் வேண்டற்பாலது. பாரம்பரியக் கலைகளே, வாழ்வியல் ஒழுக்கமே, நங்கையர் நலனே, இளையோர் ஞானமே!

தீர்ப்பாயம்: சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், த.ஹரிஷான்ந், திருமதி மணிமலர் ஜெயகாந்தராஜா.

மேற்கண்ட விவாத அரங்கத்தில் ஒவ்வொரு உபதலைப்புக்களிலும் மூவர் என்ற ரீதியில் பன்னிருவர் கலந்து வாதிடுவர். (இ)

# வெற்றிலை ஏற்றுமதி

கொழும்பு, மார்ச்08

குளியாப்பிட்டி பிரதேசத்தில் உற் பத்தி செய்யப்படும் வெற்றிலையை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குளியாப்பிட்டி ஹபலதெனிய பிரதேசத்தில் உள்ள வெற்றிலை உற் பத்திக் கிராமத்தின் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றுமதி அபி விருத்திச் சபையின் உதவியுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க)

■ புன்னியாமீன்

# ஆணுக்கு நிகராக இன்று உரிமைகளைப் பெற்று உயர்ந்து நிற்கும் பெண்கள்!

ஆண்களுக்கு இணையாக பெண்களும் தங்கள் உரிமைகளைக் கேட்டுப் போராடியதை குறிப்பிடத்தான் சர்வதேச மகளிர் தினம் ஆண்டுதோறும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த தினத்தை சீனா, ரஷ்யா, பல்கேரியா, வியட்நாம் உற்பட பல நாடுகள் விடு முறை தினமாக பிரகடனப்படுத்தியுள்ளன. இனம், மொழி, கலாசாரம், பொருளாதாரம், அரசியல் ஆகிய பல்வேறு வேறுபாடுகளை மறந்து பெண்கள் தினம் அனைத்து பெண்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இத்தினத்தில் பெண்கள் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களின் உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்காமல் சாதனைகளைக் கொண்டாடும் வகையிலும் கடைபிடிக்க வேண்டும்.

இக்கொண்டாட்டங்களில் குறிப்பாக உலகம் முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கும் ஆக்கபூர்வமான பெண்ணிலைவாதச் செயற்பாட்டாளர்கள் தனியாகவும், குழுக்களாகவும் அமைப்புக்கள் சார்ந்தும், அக்கபூர்வமான செயல்வாதங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

**மகளிர் தினத்தின் வரலாறு:**

வரலாற்றுக் காலம் முதல் பெண்கள் போகப்பண்டங்களாகவும், அடிமைகளாகவும், உரிமையற்றவர்களாகவும் காணப்பட்ட நிலையிலிருந்து படிப்படியாக மீண்ட நிலை இந்நிகழ்வின் பின்னணிக்கு அடிப்படையாக அமைகின்றது. 1789 ஆம் ஆண்டு ஜீன் 14 ஆம் திகதி சுதந்திரத்துவம், சமத்துவம், பிரதிநிதித்துவம் (அரசனின் ஆலோசனைக் குழுக்களில்) என்று கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப் புரட்சியின்போது பாரிஸில் பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர். ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் வேண்டும் என்றும் வேலைக்கேற்ற ஊதியம், எட்டு மணி நேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்று பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைச் சமாதானம் செய்து, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக மன்னர் வாக்களித்தார். ஆனால், அது அவரால் இயலாமற்போகவே மன்னர் லூயிஸ் முடிதுறந்தார். இதனால் ஐரோப்பிய நாடுகளிலுள்ள பெண்களும் கிளர்ச்சியை ஆரம்பித்தனர். இக்கட்டத்தில் இத்தாலியிலும் பெண்கள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள முயன்று தங்களுக்கு வாக்குரிமை கேட்டுப் போராட ஆரம்பித்தனர்.

கிரீஸ் நாட்டில் விஸிஸ்ட்ரடா என்பவரின் தலைமையில், ஆஸ்த்ரியா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகளும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டபோது, ஆளும்வர்க்கம்அசைந்து கொடுக்கத் தொடங்கியது. பிரான்ஸ் நாட்டில் புருஸ் லியனில் 2வது குடியரசை நிறுவிய லூயிஸ் ப்ளாங்க், பெண்களுக்கு வாக்குரிமை வழங்கவும், அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடமளிக்கவும் ஒப்புதல் அளித்தார்.

> **“ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் வேண்டும் என்றும் வேலைக் கேற்ற ஊதியம், எட்டு மணி நேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்று பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்!”**

அந்த நாள் மார்ச் 8, 1848 ஆகும். உலகப் பெண்களின் போராட்டங்களுக்கு வெற்றி கிடைத்த அந்தநாளே, மகளிர் தினமாக அமைய அடிப்படை வித்தாக அமைந்தது!. 1857ல் நியூயோர்க்கில் உழைக்கும் வர்க்கப் பெண்களின் அமைப்புகள் தோன்றி, போராட்டங்கள் ஆரம்பமாகியிருந்தன. இப் போராட்டங்களால் ஆட்சியாளர்கள் நிலை குலைந்தனர். உலகநாடுகள் அனைத்திலும் பரவிய இப்போராட்டங்களின் விளைவாக, 1910ல் பணிக்குச் செல்லும் பெண்களுக்கான சர்வதேச மாநாடு கோபன்ஹேகனில் நடைபெற்றது.

ஐ.நாவும் பெண்கள் முன்னேற்றத்துக்காவும் அவர்கள் சமத்துவ கோரிக்கைகளுக்காவும் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது.



1945 இல் சான்பிரான்ஸ்கோவில் நடந்த உடன்பாட்டின்படி பெண்களுக்கு சம உரிமை என்பது அடைப்படை உரிமையாக்கப்பட்டது. பெண்கள் தொடர்பான சர்வதேச கொள்கைகள், வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் திட்டங்கள், இலட்சியங்கள் உள்ளிட்டவற்றை மேம்படுத்த ஐக்கிய நாடு உழைத்துள்ளது.1975ஆம்ஆண்டை சர்வதேச பெண்கள் ஆண்டாக ஐக்கிய நாடு அறிவித்தது. 1977 இல் ஐக்கிய நாடு பொதுச் சபையில்சர்வதேசபெண்கள் தினத்தை ஐக்கிய நாடு பெண்கள் தினமாக கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

அதே ஆண்டு பெண்கள் மாநாட்டுக்கும் ஐக்கிய நாடு ஏற்பாடு செய்தது. சர்வதேச அளவில் பெண்கள் தினம் கடைபிடிக்கப்பட்டதை அடுத்து பெண்கள் நலன் குறித்து சர்வதேச மாநாடுகளுக்கு அது ஊக்குவித்தது.

இச்சந்தர்ப்பத்தில் பெண்ணியம், பெண் விடுதலை, பெண்ணுரிமை போன்ற கருத்துக்கள் குறித்துச் சற்றுச் சிந்தித்தல் அர்த்தமுள்ளதாக இருக்கும். பெண்ணியத்தை எடுத்து நோக்குமிடத்து ஆண்கள் பெற்றுள்ள சட்டபூர்வமான உரிமைகள் யாவும் சமமாகப் பெண் களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் எழுந்தது.

குடும்பம், உற்பத்தி ஆகியவற்றின் பின்னணியில் உள்ள பெண்ணடிமைத் தனத்தின் தோற்றத்தைக் கண்டுணர்ந்த மார்க்சியப் பெண்ணியம், தந்தை வழிக்கோட்பாட்டுக்கு எதிராக பெண்மையின் தனித்துவத்தை உயர்த்திப் பிடித்த தீவிரப் பெண்ணியம் என்பன பெண் என்பதற்கு ஒரு சாராம்சமான

**இன்று உலக மகளிர் தினமாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.**






அடையாளத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. இதன்படி உடற்கூற்றை (Biological Foundation) அடித்தளமாகக் கொண்டு பெண்ணுறுப்புக்களைக் கொண்ட அனைத்து மனித உயிரிகளைப் பெண் என இந்தப் பெண்ணியக் கருத்தாக்கங்கள் அடையாளம் கண்டன.

✦ ✦ ✦

மார்ச்-8, 1857 - அன்று முதல் உலகமெங்கும் மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் உலக மகளிர் தினம் மார்ச் மாதம் 8ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

ஆனால், அது வந்த வரலாற்றை சற்று பின்னோக்கிப் பார்ப்போம். வீட்டுக்குள்ளேயே முடங்கி கிடந்த பெண்கள், தற்போது வானில் பறந்து கொண்டிருக்கின்றனர் என்றால், அதற்கு வித்திட்ட பல்வேறு போராட்டங்களின் வெற்றியே இந்த மகளிர் தினமாகும். இந்த உலக மகளிர் தினம் கொண்டாடுவதற்கு காரணமான போராட்டத்திற்கான வெற்றிகள் அவ்வளவு எளிதாக கிட்டவில்லை. ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள்தான் இது.

1910 ஆம் ஆண்டு கோபன்ஹேகனில் பெண்கள் உரிமை மாநாடு நடைபெற்றது. இதில் உலகின் பல நாடுளைச் சேர்ந்த பெண்களின் அமைப்புகள் கலந்துகொண்டு தங்களது ஒற்றுமையை உலகிற்கு காட்டினர். இந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஜேர்மனி நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கிளாரா செர்கினே, ஒரு தீர்மானத்தை வலியுறுத்தி சிறப்புரை ஆற்றினார்.

அந்த தீர்மானத்தின் முக்கிய சராம்சமாக மார்ச் மாதம் 8 ஆம் திகதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். ஆனால், அந்த தீர்மானம் நிறைவேறாமல் போனது. இதற்கிடையில், 1920 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயிண்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் ரஷ்யாவைச் சேர்ந்த அலெக்ஸாண்டரா கேலன்ரா கலந்து கொண்டார். அவர்தான் உலக மகளிர் தினத்தை ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் திகதி நடத்த வேண்டும் என்று பிரகடனம் செய்தார்.

மார்ச் 8 ஆம் திகதிக்கும், மகளிருக்கும் என்ன சம்பந்தம் என்று உழைக்கும் கீழ்த்தட்டு பெண் வர்க்கமே அறிந்துகொள்ளாத தினமாகத்தான் இந்த பெண்கள் தினம் இன்று இருக்கிறது. 1789 ஆம் ஆண்டு ஜீன் 14 ஆம் திகதி சுதந்திரத்துவம், சமத்துவம், பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கைகளை முன் வைத்து, பிரெஞ்சுப் புரட்சியின் போது பாரிஸில் உள்ள பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர்.

(இ

காலைக்கதிர்
Kalaikkathir



# இனக் கலவரங்கள் இலங்கை மக்களுக்கு புதியவை அல்லவே!

> உள்ளூராட்சிப் போர் முடிவுற்றபின் இப்போது மீண்டும் புதிய வடிவத்தில்

இலங்கை இனக்கலவரங்களுக்கு பழகிப்போன நாடுதான். இங்கு தமிழருக்கு எதிராக கடந்த காலங்களில் நடந்த வன்செயல்கள், அதனைத் தொடர்ந்த கலவரங்கள் பெரும்பாலும் சர்வதேச மட்டத்தில் பேசப்பட்ட, பலரும் அறிந்த விடயங்கள்.

ஆனால், இலங்கையில் நடந்த முதலாவது வன்செயல் அல்லது கலவரம் முஸ்லிம்களுக்கு எதிரானது என்பது தற்போதைய சந்ததியினர் அறியாத விடயம்.



### முதலாவது இனக்கலவரம்

1915இல்தான் இலங்கையில் அண்மைய சரித்திரம் அறிந்த முதலாவது இனக்கலவரம் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நடந்தது.

அன்றைய அந்த முதலாவது கலவரத்தின்போது சிங்களவர்களின் கும்பல் ஒன்று கண்டியில்தான் பள்ளிவாசலை தாக்கி, முஸ்லிம்களின் வணிக நிறுவனங்களை எரித்துள்ளது.

அப்போது இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்தது. இப்போது மீண்டும் கண்டியில் அப்படியான கலவரம் ஒன்று நடந்தேறியுள்ளது. அதுதான் இப்போதுள்ள ஒற்றுமை.

### சுதந்திரத்திற்கு பின் தமிழ்-சிங்கள கலவரம்

சுதந்திரத்துக்கு பின்னர்தான் இலங்கையில் தமிழ்– சிங்கள கலவரங்கள் நடக்கத் தொடங்கின.

1958, 1977 மற்றும் 1983 கலவரங்கள் தமிழர்களுக்கு எதிராக மிக பெரிதாக திட்டமிட்டு நடத்தப்பட்டவையாக கருதப்படுகின்றன.

1983இல் தமிழ் இளைஞர்களும் ஆயுதங்களை கையில் எடுக்க, நிலைமை ஓர் உள்நாட்டுப் போராகவே மாறிவிட்டது.

இந்தக் காலகட்டங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்களில் சிங்களவர்கள் ஈடுபட்டது குறைவு. ஆனால்,



வடக்கில் இருந்து முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டமை உட்பட, கிழக்கு மாகாணத்தில் தமிழ்– முஸ்லிம் இன மோதல்கள் அப்போது நடந்திருக்கின்றன.

ஆனால், உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னரே மீண்டும் முஸ்லிம்கள் மீது ஆங்காங்கு தாக்குதல்கள் நடந்துள்ளன.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மாவனல்ல,காலி மற்றும் களுத்துறை பகுதிகளில் அப்படியான வன்செயல்கள் அவ்வப்போது நடந்து வந்திருக்கின்றன.



பொதுவாக, முஸ்லிம்களின் வணிக முயற்சிகளின் வெற்றி, அரசியலில் அவர்கள் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக எண்ணிக்கை அடிப்படையில் உருவாகியிருப்பது, அவர்கள் மீதான தாக்குதல்களுக்கான நேரடிக் காரணங்களாக முஸ்லிம் மக்களாலும் அரசியல்வாதிகளாலும் பார்க்கப்படுகின்றன.

1983 கலவரத்தின் போதும், அதற்கு பின்னரான உள்நாட்டுப்போரின் போதும் முஸ்லிம்கள் பெரும்பான்மையினத்தவரோடு இணைந்து தமிழருக்கு எதிராக செயற்பட்டனர் எனத் தமிழ் தரப்பினர் பார்க்கிறார்கள்.

ஆனால், உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னர் முஸ்லிம்கள் மீதே இப்படியான தாக்குதல்களும், இன ரீதியான வெறுப்பு பிரசாரங்களும் முடுக்கிவிடப்படுள்ளன.

### இருவகை இன முறுகல்கள்

குறிப்பாக, இங்குள்ள இனமுறு கல்களை தற்போதைக்கு இரு வகையாக பார்க்கலாம்.

ஒன்று, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சிங்கள– முஸ்லிம் முரணாகவும், இரண்டு, கிழக்கு மாகாணத்தில் காணி போன்ற பிரச்சினைகள் காரணமாக முஸ்லிம் – தமிழ் முரணாகவும் அவற்றை பார்க்க முடியும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழரோடு ஒப்பிடுகையில் முஸ்ஸிம்கள் அரசியல் ரீதியாக ஓரளவு அதிகாரத்தை தம் வசம் வைத்திருப்பதால், அவற்றை பிரயோகித்து தமது நிலங்களை அவர்கள் ஆக்கிரமிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு தமிழர் தரப்பில் இருந்து முன்வைக்கப்படுகின்றது.

ஆனால், அம்பாறை நகரில் கடந்த வாரம் உணவில் முஸ்லிம் கடைக்காரர்கள் ஆண்மையை இழக்கச் செய்யும் மருந்தை கலப்பதாக குற்றஞ்சாட்டி தாக்கிய சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பெரும்பான்மை சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாவர். இந்தச் சம்பவந்தான் அண்மைய வன்முறை செயல்களில் முதலில் நடந்ததாகும்.

### நடந்தது அதிகார துஷ்பிரயோகமா?

அன்றைய தினம் திட்டமிட்ட வகையில் பஸ்ஸில் வந்த கூட்டம் தமது பள்ளிவாசல் ஒன்று உட்பட பல உடைமைகளை தாக்கி சேதமாக்கியதாக முஸ்லிம்கள் கூறுகிறார்கள்.



ஆனால், அன்றைய தினத்தில் அம்பாறை மாவட்டத்தில் அட்டைப் பள்ளம் என்ற இடத்தில் இந்துமக்களின் மயானத்தை முஸ்லிம் ஒருவர் ஆக்கிரமித்ததாக கூறி, அதனைத் தடுக்கச் சென்ற தம்மை முஸ்லிம் பொலிஸார் மற்றும் அதிகாரிகள் தடுத்து வைத்தனர் என்று தமிழர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

தமது காணிகளை முஸ்லிம்கள் ஆக்கிரமிப்பதன் ஒரு கட்டமாக அவர்கள் இதனை பார்க்கிறார்கள்.

அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து 23 தமிழர்கள் (பெண்கள் உட்பட) பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டனர் என அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இவை பெரிதாக ஊடகங்களில் பேசப்படவில்லை.

இதனையடுத்து, இரு தினங் களுக்கு முன்னதாக கண்டி நகரில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் மீண்டும் அவர்கள் மீது பெரும்பான்மை இன சிங்களவர்களின் குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

ஒரு சிறிய வாகன விபத்துச் சம்பவத்தை அடுத்து ஒரு சிங்கள நபரை முஸ்லிம்கள் சிலர் தாக்கவே அவர் சில தினங்களின் பின்னர் மருத்துவமனையில் மரணமடைந்துள்ளார்.

அதனையடுத்தே அங்கு ஆர்ப்பாட்டம் செய்வதற்கு வந்த சிங்கள கூட்டம் ஒன்றால் முஸ்லிம்களின் சொத்துக்கள், வழிபாட்டு இடங்கள் தாக்கப்பட்டுள்ளன.

பொலிஸார் தலையிட்டும் நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. ஊரடங்கு வேளையிலும் தாங்கள் தாக்குதலுக்கு இலக்காகினர் என முஸ்லிம்கள் கூறுகின்றனர்.

தம்மீது தாக்குதல் நடத்த வந்த கூட்டத்தில் பௌத்த பிக்குகளும் காணப்பட்டனர் என அவர்கள் கூறுகின்றனர். படங்களும் அதனை உறுதி செய்கின்றன.உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு பொலிஸார் பாதுகாப்புக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு சில அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டுள்ளன.

### அவசர காலச் சட்டத்திற்கு என்ன தேவை?

அது மட்டுமன்றி முன்னதாக நடந்த தாக்குதலில் சிங்கள நபர் மரணமானது குறித்தும் பொலிஸார் சரியான நடவடிக்கையை எடுக்கவில்லை என்றும், அவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த வன்செயல்கள் வெடித்திருக்க மாட்டா என்றும் பொதுபலசேன என்ற கடும்போக்கு சிங்கள அமைப்பு கூறியுள்ளது.

ஆகவே, பொலிஸாருக்கும் மேலாக




இராணுவத்தை அழைக்கும் தேவை அரசாங்கத்துக்கு வந்திருக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், சிறுபான்மை மக்களின் ஆதரவுடன் வந்ததே தற்போதைய நல்லாட்சி அரசு.

இதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முஸ்லிம்களின் ஆதரவு அதிகம்.

அண்மைய தேர்தலில் அந்தக் கட்சி பின்னடைவை சந்தித்ததை அடுத்து நடந்த அமைச்சரவை மாற்றத்தின் போது நாட்டின் சட்டம், ஒழுங்குக்கான அமைச்சு பிரதமரின் பொறுப்பில் விட்டு வைக்கப்பட்டிருக்கின்றது.

ஆகவே அவர் பொறுபேற்ற உடனேயே நடந்திருக்கும் இரு இன மோதல் சம்பவங்கள் அவருக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளன.

சட்டம், ஒழுங்கு அமைச்சரின் செயல் திறனின்மையே அமைதியின்மைக்கு காரணம் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இப்படியான நிலைமைகளே எப்படியாவது நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு கடினமான நடவடிக்கையை எடுக்க அரசாங்கத்தை தூண்டியுள்ளன. அதன் விளைவாகவே இந்த அவசர நிலை பிரகடனம் உடனடியாக வந்துள்ளது.

இந்த அவசர நிலைகூட முதற் கட்டமாக அதிகபட்சம் 10 நாள்களுக்கே அமுலில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ)

*நன்றி:- பி.பி.ஸி*

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்.
கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது.
'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.




# நல்லதோர் வீணை செய்து

(மறைந்த நாடக நடிகர் அருமைநாயகம் பற்றிச் சில எண்ண அலைகள்)

வேறொருநாள், பஸ்ஸுக்காக வீதியோரத்திற் காத்து நிற்கிறேன் நான். நீண்ட நேரமாய் பஸ் இல்லை. அவ்வழியால் வந்த அருமைநாயகம் என்னைக் கண்டதும் சைக்கிளை நிறுத்தி, என்னோடு பேசிக் கொண்டு நிற்கிறார். அப்போது அங்கு வந்த ஒருவர் அருமைநாயகத்தைத் தெரிந்து கொண்டு 'என்ன தம்பி நல்லா மெலிஞ்சுபோனீர்' என்று விசாரிக்க, அருமைநாயகம் அவரைக் கொஞ்ச நேரம் முறைத்துப் பார்த்துவிட்டு, பிறகு வானத்தைப் பார்த்து, 'இண்டைக்கு மழை வரும் போல' என்கிறார். வந்தவருக்கு அருமைநாயகம் தன்னைக் 'காய்வெட்ட' நினைப்பது புரிய 'சரி சரி வர்றன் தம்பி' என்று அவசரமாய்ப் போய்விடுகிறார். நான் அருமைநாயகத்தைப் பார்த்து 'அவர் அக்கறையா உங்களை மெலிஞ்சு போனீங்கள் என்று கேட்க, சம்பந்தமில்லாமல் மழை வரும் போல என்று பதில் சொல்லுறீங்கள் அந்தாளுக்கு முகம் கறுத்துப் போச்சு. ஏன் இப்படி உலகத்தோட பகைக்கிறீங்கள்' என்று கேட்கிறேன். அருமைநாயகம் சற்றுக் கோபத்துடன், ''உமக்கு இவங்களை விளங்காது. போனமாசம் என்னைக் கண்டு என்ன, வரவர உடம்பு கொழுக்குது? என்று இவன் தான் கேட்டவன். இண்டைக்கு என்ன மெலியிறீர்? என்று கேட்கிறான். அவனுக்கு என்னைப் பற்றி ஒரு அக்கறையும் இல்லை. என்னைக் கண்டதால சம்பந்தமில்லாம அவன் சும்மா ஒரு கேள்வி கேட்டவன். அதுதான் நானும் சம்பந்தமில்லாம மழை வரும் என்றனான்''.அருமைநாயகம் சொல்ல, நான் வீடு போய்ச் சேரும் வரையும் பஸ்ஸுக்குள் சிரிக்கிறேன். அருமைநாயகத்தைப் பார்ப்பது போல் என்னையும் சில பேர் பார்க்கத் தொடங்கினர்.

* * *

கம்பன் கோட்டக் கட்டட வேலை நடந்து கொண்டிருக்கிறது. நான் மேற்பார்வை செய்து கொண்டு நிற்கிறேன். நீண்ட நாள் வராமல் இருந்த அருமைநாயகம் அன்று வருகிறார். வழமையை விடச் சற்றுச் சந்தோசமான மனநிலையில் அவரிருப்பதை முகம் சொல்கிறது. உரையாடத் தொடங்குகிறோம். 'என்னண்ண, கனநாளாய்க் காணயில்லை?' ''ஓம், வீட்டில வேலை கூடிப் போச்சு, அது தான் வரயில்லை. இப்ப ஒரு புதினம் சொல்லிற்றுப் போவமெண்டு வந்தனான்.'' 'என்ன புதினம் அண்ண?' ''நானெல்லோ பாதிரியார் ஆகப் போறன்'' தனியே இருந்து அவர் கஷ்டப்படுவது தெரிந்ததால் பாதிரியாரானால், அவருக்குப் பாதுகாப்பான ஒரு வாழ்க்கை கிடைக்கும் என நினைந்து எனக்கு மகிழ்ச்சி. உரையாடல் தொடர்கிறது. 'நல்லதண்ண. எனக்குப் பெரிய சந்தோஷம்' நான் சொல்ல, அருமைநாயகத்தின் முகம் சுருங்குகிறது. ''என்ன நீரும் பொய்ய வரவேற்கிறீர் போல?'' என்கிறார். 'ஏன் பொய்யென்கிறீயள்?' நான் கேட்க, ''பாதிரியாராக் கொஞ்சப் பேரைப் படிப்பிக்கப் போயினம் என்று கேள்விப்பட்டு நானும் போனன். என்னைப் பேசச் சொல்ல, வேணுமெண்டு ஒரு தேவாரம் பாடிப் போட்டுப் பேசினன். வந்த பாதிரியார், உடன என்னைச் 'செலக்ட்' பண்ணிப் போட்டார்.'' அருமைநாயகம் சிரித்த படி சொல்கிறார். 'ஏன் அண்ணை அங்க தேவாரம் பாடினனீங்கள், அவர்களுக்குப் பிடிக்காதெல்லோ?' நான் கேட்கிறேன். அருமைநாயகம் மீண்டும் சிரிக்கிறார். ''உமக்கு விஷயம் விளங்கயில்லை. நான் தேவாரம் பாடின படியால்தான் என்னை 'செலக்ட்' பண்ணினவங்கள். தேவாரம் தெரிஞ்ச நான் தான் சைவசமயத்தைக் கண்டிச்சுப் பேச முடியும் எண்டதால தான், என்னை எடுத்தவங்கள். அப்பிடியெடுப்பாங்கள் என்று தெரிஞ்சுதான், நானும் தேவாரம் பாடினனான்.'' இது வழமையான, அருமைநாயகத்தின் குசும்புப் பதில். வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு 'சரி சரி அங்கையும் போய், கொழுவுப் படாம ஒழுங்கா இருக்கப் பாருங்கோ. உங்கட பிற்காலத்துக்கு நல்லது' சொல்லி அனுப்பினேன்.



# உன்னைச் சரணடைந்தேன்

* * *

மூன்று மாதம் கழித்து ஒரு நாள். என்னிடம் வருகிறார் அருமைநாயகம். 'எப்படி அண்ண பாதிரியார் பயிற்சி எல்லாம் போகுது?' நான் கேட்க ''உமக்கு விஷயம் தெரியாதே? அங்கிருந்து என்னைக் கலைச்செல்லே போட்டாங்கள்'' சிரித்தபடி அருமைநாயகத்திடமிருந்து பதில். என்ன நடந்ததென்று நான் கேட்க, நடந்ததை விவரித்தார் அருமைநாயகம். ''மடத்திலேயே தங்கியிருந்து படிக்க வேணுமெண்டாங்கள். வெளியில போக விடமாட்டனெண்டுட்டாங்கள். என்ர வீட்டில ஒரு நாய் நிண்டது அதுக்கு என்னில சரியான அன்பு. செத்த என்ர அம்மாதான் அந்த நாயெண்டு நான் நினைக்கிறனான். அதத் தனிய விட்டுட்டுப் போக மனமில்லாமல், அதையும் சைக்கிளில ஏத்திக் கொண்டு தான் மடத்துக்குப் போனனான். உதென்ன எண்டு கேட்டாங்கள்? என்ர அம்மா எண்டன். நான் பகிடிவிடுறதா நினைச்சு அவங்களுக்குக் கோபம் எண்டாலும் நாயை வைச்சிருக்க விட்டிட்டாங்கள். எங்களைப் பராமரித்தவர் விதிச்ச கட்டுப்பாடுகள் எனக்குப் பிடிக்கே. மற்றவர்களை மேய்க்கிறதில அவருக்குப் பெரிய ஆனந்தம். எனக்கு அது பிடிக்கேல. ஒரு மாசம் ஒரு மாதிரி சமாளிச்சன். ஒரு நாள் எங்கட வகுப்பைக் காட்ட பெரிய பாதிரியாரை கூட்டிக் கொண்டு வந்தார் பொறுப்பாளர். பெரிய பாதிரியார் இந்த வகுப்புப் பற்றி உங்கட அபிப்பிராயத்தை சொல்லுங்கோ எண்டார்.

# கம்பவாரிதி ஜெயராஜின் 117 இலக்கிய அனுபவப் பகிர்வு

இருந்தவங்கள் எல்லாம் பொறுப்பாளரைச் சந்தோசப் படுத்த திறமான வகுப்பு எண்டு சும்மா புளுகினாங்கள். கொழுவ வேணாம் எண்டு நீர் சொன்னதால நான் ஒண்டும் பேசாம இருந்தன். ஆற்ற கஷ்டகாலமோ தெரியேல, பாதிரியார் என்னைப் பார்த்து 'நீரும் இந்த வகுப்பைப் பற்றிச் சொல்லும்' என்றார். நான் எழும்பி, 'பூஸா'ச் சிறைச்சாலையை விடப் பறவாயில்லை எண்டன். பொறுப்பாளருக்கு முகம் சிவந்து போச்சு. பெரிய பாதிரியார் 'ஏன் அப்பிடிச் சொல்லுறீர்?' எண்டார். நான், அங்க பிடிச்சு அடைச்சாத் துப்பரவாய் விடாங்கள், இங்க மாசம் ஒரு தரம் வீட்டைப் போக விடுகினம். அது தான் அதை விடப் பறவாயில்லை எண்டனான்-என்று சொல்ல அண்டைக்குப் பின்னேரமே என்னைக் கலைச்சுப் போட்டாங்கள்.'' எந்த வித கவலையும் இல்லாமல் அருமைநாயகம் சொல்ல, 'சீவீணா ஒரு நிம்மதியான வாழ்க்கையை இழந்து போட்டீங்கள் அண்ண' என்று நான் கோபிக்கிறேன். ''நிம்மதியோ?, உமக்கு விசர் இப்ப வீட்டில நாயோடு வலு சந்தோசமாய் இருக்கிறன்.''- என்கிறார். தாயை நாயாய் மதிக்கும் பலர் மத்தியில், நாயை தாயாய் மதிக்கும் அவர் கருணையுள்ளம் கண்டு, என் கண்கள் கலங்கின. ஓர் உண்மைக் கிறிஸ்தவனை அன்று இனங்கண்டேன்.

* * *

அருமைநாயகம் பற்றி மறக்க முடியாத மற்றொரு சம்பவம். யாழ்ப்பாணம் அப்போது புலிகளின் கையில் இருந்தது. புலிகளால் 'நிதர்சனம்' என்ற பெயரில், தொலைக்காட்சி சேவை ஒன்று நடத்தப்பட்டது. அந்த நிறுவனத்தின் ஓராண்டு நிறைவு. அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த பெரிய படிப்பாளிகளையெல்லாம் அழைத்து 'நிதர்சன' வளர்ச்சி பற்றி ஆலோசனை கேட்க புலிகள் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர். அக்கூட்டத்துக்கு அருமைநாயகமும் வந்திருந்தார். காலை ஒன்பது மணிக்குக் கூட்டம் தொடங்கியது. கூட்டம் தொடங்கியவுடனே ஒரு கல்விமான் எழும்பி, 'நிதர்சனம்' என்ற பெயரின் ஆங்கில உச்சரிப்புப் பிழை என்றும், அச் சொல் வேறு விதமாய் எழுதப்பட்டால்தான் 'நியூமோறலொஜி'ப்படி இந்த நிறுவனம் உயரும் என்றும் சொல்ல, மற்றோர் ஆங்கிலப்புலமை மிக்க அறிஞர் அதை மறுக்க, பயனில்லாமல், மதியம் வரை கல்விமான்களின் விதண்டாவாதங்களில் கூட்டம் போய்க்கொண்டிருந்தது. மதிய உணவு நேரம் நெருங்கி விட்ட வேளையில் அருமைநாயகம் எழும்பிப் பேசத் தொடங்கினார். அவரது பிச்சைக்காரத் தோற்றம், 'ரிப்ரொப்' பாக வந்திருந்த படிப்பாளிகளுக்குப் பிடிக்கவில்லை. அருமைநாயகத்தை அலட்சியம் செய்து, தங்களுக்குள் பேசத் தொடங்கினர். அவர்கள் கவனிக்கவில்லை என்று தெரிந்ததும் அருமைநாயகம் திடீரெனக் குரலை உயர்த்திப் பேசத் தொடங்கினார். அவர் குரலை உயர்த்தியதும் எல்லோரும் அவரைப் பார்க்க, அருமைநாயகம் ''உங்களுக்கு நான் பேசிறது பிடிக்கேல்லை எண்டு தெரியுது. நான் கனக்க ஒண்டும் சொல்ல விரும்பேல. இவ்வளவு பேரும் பேசினதுல இருந்து ஒண்டத் தெரிஞ்சு கொண்டன். அதைச் சொல்லத் தான் எழும்பினனான்'' அருமைநாயகம் கொஞ்சம் இடைவெளி விட வாதிட்ட அறிஞர்கள், யார் சார்பாக இவர் கருத்துச் சொல்லப் போகிறார் என ஆவலுடன் கேட்கத் தொடங்குகின்றனர். அருமைநாயகம் தொடர்கிறார். ''நீங்கள் பேசினதில இருந்து ஒண்டத் தெரிஞ்சு கொண்டன் நல்ல காலம், பிரபாகரன் உங்களை எல்லாம் கூப்பிட்டு, ஆலோசிச்சு இயக்கம் தொடங்கேல்லை. அப்பிடிக் கூப்பிட்டு ஆலோசிச்சிருந்தா இண்டைக்கு வரைக்கும் அந்தார், இயக்கத்திற்கு பேரே வச்சிருக்க முடியாது. அதைத் தான் சொல்ல வந்தனான். நான் வர்றன்.'' வணக்கம் சொல்லிவிட்டு அருமைநாயகம் போக, அத்தனை அறிஞர்கள் முகத்திலும் அசடு வழிகிறது. தங்களைப் பைத்தியமாக்கிய அருமைநாயகத்தை, பைத்தியக்காரன் என்று சொல்லி சமாளித்துச் சிரித்தனர். அலட்சியமாய் சென்ற அருமைநாயகத்தை, ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன் நான்.

* * *

இவையெல்லாம் அருமைநாயகம் பற்றிய சில மனப் பதிவுகள். விசரன் போல் திரிந்தாலும், ஞானக் கிறுக்கனாய்த் திகழ்ந்தவர் அருமைநாயகம். விதி பிழைக்க, அவர் முயற்சிகள் தோற்றுப் போயின. ஆனாலும், தான் அமைத்துக் கொண்ட நாடக பாதையை விட்டு, அசையாது மரணிக்கும் வரையும் நடந்தவர். செயல் முடியாது போக வார்த்தையாலும், வார்த்தையும் முடியாது போக மனத்தினாலும், நாடகம் பற்றியே முயன்று கொண்டிருந்தவர். அந்த முழுமையான ஈடுபாடு, கல்வி, அறிவு கடந்து, அவரை ஒரு ஞானி ஆக்கிற்று. நாடகத்தை அவரளவு நேசித்த எவரையும் நான் கண்டதில்லை. பொய் கலவாத அவர் உண்மை நடத்தை, பலருக்கு அவரை பைத்தியமாய்க் காட்டினும் என் மனதில் அவர் ஒரு ஞானியாகவே பதிந்திருக்கிறார். என் துறையினூடு அவரது நிலை எனக்கு எய்துமா? என ஏங்குகிறேன். இறைவன் படைத்த ஒரு அற்புதப் பாத்திரம் அவர். 'வல்லமைதாராயோ' என்ற ஏக்கத்துடன், பாரதியைப் போலவே அருமைநாயகமும் கடைசிக் காலத்தில், ஓர் அநாதையாய் இறந்து போனார்.

* * *

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



# சிறுமி துஷ்பிரயோகம்; கனடாவில் தமிழர் கைது!

கொழும்பு, மார்ச் 08

கனடா, டொரொன்டோ பகுதியில் தமிழர் ஒருவர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என அந்த நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சிவலிங்கம் வல்லிபுரம் என்ற 80 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

12 வயதுடைய சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட 80 வயதுடைய தமிழரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 28 ஆம் இந்த நபர் தனது வீட்டில் சிறுமிக்கு பாடம் கற்பிக்கும்போதும் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலியல் தாக்குதல், பாலியல் தலையீடு மற்றும் பாலியல் சேட்டை ஆகிய குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டன. எனினும் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க)














முல்லைத்தீவு உண்ணாபுலவு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட மார்பு நோய் சிகிச்சை நிலைய கட்டடத் தொகுதி கடந்த செவ்வாயன்று வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது

உலக காசநோய் மற்றும் மலேரியா தடுப்பு நிதியத்தில் இருந்து வழங்கப்பட்ட 230 லட்சம் ரூபாவில் அமைக்கப்பட்ட இந்த மார்பு நோய் சிகிச்சை நிலைய திறப்பு விழா நிகழ்வில் வடமாகாண முதலமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன், வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், வைத்தியர்கள், ஊழியர்கள், பொதுமக்கள், மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(இ-81)

யுத்தகாலத்தில் புதைக்கப்பட்ட

# கண்ணிகளை அகற்ற இலங்கை அரசு எடுத்த முயற்சிக்கு வரவேற்பு

## ஐ.நாவின் சிறப்புத் தூதுவர் இளவரசர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 07

யுத்தகாலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு இலங்கை அரசு எடுத்துள்ள முயற்சிகளை வரவேற்றுள்ள கண்ணிவெடிகளைத் தடை செய்யும் பிரகடனத்தின் ஐ.நாவின் சிறப்புத் தூதுவர் இளவரசர் மிரெட் ராட் செயிட் அல்ஹுசைன் இலங்கை அரசுக்கு தொடர்ந்தும் சர்வதேசம் உதவிகள் வழங்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



மேலும் கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இருகரம் கூப்பி தனது மரியாதையை வெளியிட்ட தூதுவர் அல்ஹுசைன் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான உதவிகள் வழங்கப்பட வேண்டுமென்றும் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நாவின் சிறப்புத் தூதுவர் இளவரசர் மிரெட் ராட் செயிட் அல்ஹுசைன் நேற்று முன்தினம் வட பகுதிக்கு வருகை தந்திருந்தார்.

இதன்போது யுத்தகாலத்தில் கண்ணிவெடிகள் அதிகம் புதைக்கப்பட் டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை பகுதிக்கு நேரடி விஜயமொன்றையும் மேற்கொண்டிருந்தார்.

இதன் போது கண்ணி வெடிகள் அகற்றும்பகுதிகளைச் சென்று பார்வையிட்டதுடன் அந்தப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களையும் சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தார்.

மேலும் கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டவர்களையும் சந்தித்தித்து கலந்துரையாடினார். இதன்போது அவர்களுக்கு என்ன நடந்தது, எப்போது நடந்தது, இப்போது என்ன செய்கின்றீர்கள் என்பது குறித்து அவர்களிடம் கேட்டறிந்து கொண்ட தூதுவர் கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டுமென்று கூறினார்.

இதேவேளை, தனது விஜயத்தின் போது கண்ணிவெடியகற்றும் பகுதிகளைப் பார்வையிட்டதுடன் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கும் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இதன் போது கண்ணிவெடியகற்றல் குறித்து அவர் பல்வேறு விடயங்களைக் கூறியிருந்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அரசு முன்னெடுத்துள்ள கண்ணிவெடியகற்றும் செயற்பாடு என்பது மிகவும் கஷ்டமானதொரு செயற்பாடாகும். இவ்வாறான நிலையில் இலங்கை அரசு முன்னெடுத்துள்ள நல்ல முயற்சியை வரவேற்கின்றோம் - என்றார் .

(சு-07)

# வவுனியா வடக்கு வலயத்திற்கு 3 மாதங்களாக கல்விப்பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை!

வவுனியா வடக்கு வலயத்திற்கு கடந்த மூன்று மாதங்களாக வலயக்கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை எனத் தெரி விக்கப்படுகின்றது.

வடமாகாண கல்வி அமைச்சின் கீழான வவுனியா வடக்கு வலயத்தில் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய சிறிஸ்கந்த ராஜா கடந்த டிசெம்பர் மாதம் ஓய்வு பெற்று சென்ற நிலையில் புதிய வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எனினும் மூன்று மாதங்கள் கடந்தும் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை. இதனால் வலயக் கல்விப் பணிப்பாளர் இன்றியே பாடசாலையின் முதலாம் தவணைக் காலம் முடிவடைகிறது என ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

(சு-100)

# இழப்பீடு வழங்க அலுவலகம்

கொழும்பு, மார்ச் 08

இழப்பீடு வழங்குவதற்கான அலுவலகத்தை அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

மனித நேய சட்டம் கடுமையான முறையில் மீறலுக்குள்ளான கீழ்க்கண்ட சந்தர்ப்பங்கள் தொடர்பில் அமைச்சரவை யினால் அடிக்கடி அங்கீகரிக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்திற்கு அமைய பாதிக்கப்பட்ட முழுமையான இழப்பீட்டினை வழங்குவதற்காக சுயாதீன நிறுவனம் ஒன்றை முன்னெடுப்பதன் தேவை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதற்கமைய கீழ்க்காணும் சம்பவங் களுக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளன.

கடந்த காலப்பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணங் களில் இடம்பெற்ற மோதல் அல்லது அதன் பெறுபேறாக அதனால் அனர்த்தம் ஏற்பட்ட சம்பவங்கள், அரசியல் மோதல் அல்லது பொதுமக்கள் குழப்ப நிலை, இலங்கையில் நபர்களின் ,குழுக்களின் அல்லது இன மக்களின் உரிமைகளை திட்டமிட்ட வகையில் மீறுதல்.

மேலும், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் அனைத்து நபர்களினதும் பாதுகாப்பு தொடர்பாக சர்வதேச இணக்கப்பாடு அமுலத்தப்படுத்தப்பட்டுள்ள வகையில் காணாமல் ஆக்குதல் போன்றவற்றுக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளன என அரசுத் தகவல்கள் தெரி விக்கின்றன.

இதற்கமைவாக இவ்வாறான சம்பவங்களினால் பாதிப்பிற்கு உள்ளான மோதல்களுக்குள் சிக்கிய கிராம மக்கள், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படை உறுப்பினர்களின் குடும்பங்கள் அனைத்து இன மற்றும் மதக் குழுக்களுக்கு சொந்தமான இலங்கையர்களுக்கு பாதிப்பிற்கான முழுமையான நஷ்ட ஈட்டு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும்.

இதற்கு தேவையான திருத்த சட்ட மூலத்தை தயாரிப்பதற் காக ஆலோசனை களை வழங்குவதற்கென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (க)

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 16 விடைகள் (பகுதி II )

01. 1. காகம்
    2. வியப்புக்குறி / ஆச்சரியக்குறி, வினாக்குறி
    3. 1. தெரு          2. மனத்திலே
    4. காகம்
    5. வண்ண, சிறந்த, வளர்ப்பு
    6. நீயாவாய்

02. 1. கூவின          2. குரைத்தது
03. 1. வறுமையிற் செம்மை          2. உத்தம நட்பு
04. 1. நட்டாற்றில் கைவிடல்          2. நெஞ்சு புண்ணாதல்
05. 1. குனிந்து வளைந்து கும்மியடி          2. குத்து விளக்கே சாய்ந்தாடு
06. 1. காடுகளை அழிப்பதனால் சுற்றுப்புறச்சூழல் மாசடைகின்றது.
    2. உழவுத் தொழிலுக்கு ஒப்பானது இவ்வுலகில் வேறெதுவும் இல்லை.
07. 1. பால்          2. நாணல்
08. 1. Sun
09. 1. கவனமாய் இரு          2. தயவுசெய்து உங்களுடைய வீட்டு வேலையை செய்
10. 1. பாகற்காய்
11. 1. மிருகக் காட்சிச்சாலைக்குப் போவோமா?
    2. முப்பது ரூபாய்
12. எழுவாய் பயனிலை கொண்ட (5 சொற்களுக்கு மேல் இருத்தல் வேண்டும்)
13. 1. 1240          2. 200
14. 1. *4l 600ml / 4600ml*
15. 45
16. 1. 15 : 45 மணித்தியாலங்கள்          2. 8 மணி 30 நிமிடம்
17. 96cm
18. 2550 தேங்காய்கள்
19. ராமு
20. 24cm
21. *1250ml / 1 l 250ml*
22. 1920g / 1kg 20g
23. $\frac{3}{12}$, $\frac{6}{24}$, $\frac{1}{4}$
24. ரூபா 50.00
25. VIII
26. 90m
27. 1080 மாணவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 28. 2 | 29. 3 | 30. 2 | 31. 1 |
| 32. 4 | 33. 3 | 34. 1 | 35. 2 |
| 36. 3 | 37. 2 | 38. 4 | 39. 4 |
| 40. 3 | 41. 3 | 42. 1 | 43. 3 |
| 44. 3 | 45. 2 | 46. 1 | 47. 4 |
| 48. 1 | 49. 2 | 50. 2 | 51. 4 |
| 52. 1 | 53. 3 | 54. 2 | 55. 3 |
| 56. 2 | 57. 2 | 58. 2 | |







# கல்விக் கதிர் வெளியீடு
## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் **19**


பகுதி - I          நேரம்- 45 நிமிடம்

வினாத்தாள் 19 பகுதி I இன் தொடர்ச்சி...


11. **வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**



12. அம்புக்குறிகளின் மூலம் காட்டப்படும் பாதைகள் வழியே A இலிருந்து B வரைக்கும் செல்வதற்கு மிகத் தூரம் கூடிய பாதையைக் காட்டும் உருவின் கீழ் கோடிடுக.



13. கனவுருவை அமைக்கத் தக்க உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக..




14. பாடசாலையின் கண்காட்சியொன்றும் 9 ஆந் திகதி ஆரம்பமாகி மூன்று நாட்கள் நடைபெற்றது எனின் கண்காட்சி முடிவடைந்த திகதி

1. *11ம் திகதி*          2. *12ம் திகதி*          3. *13ம் திகதி*

15. சமதூர இடைவெளியில் நடப்பட்ட மூன்று கம்பங்களுக்கு இடையிலான தூரம் 24cm எனின் ஆறு கம்பங்களுக்கு இடையிலான தூரம் யாது?

1. 48 cm  2. 60 cm  3. 56 cm

16. மூன்று சமச்சீர்க் கோடுகளை மாத்திரம் கொண்ட உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. 
2. 
3. 

17. எப்போதாவது நடைபெறக் கூடிய நிகழ்வுவைத் தெரிவு செய்க.

1. சூரியன் உதித்தல்  2. விண்மீன் தோன்றுதல்  3. சூரிய கிரகணம் தோன்றுதல்

18. கடிகாரம் என்னும் சொல்லில் இருந்து ஆகக் கூடுதலாக எத்தனை சொற்களை உருவாக்க முடியும்?

1. 4  2. 3  3. 5


19. 2016 ஆம் ஆண்டு தை மாதத்தினதும், மாசி மாதத்தினதும் நாட்களின் மொத்த எண்ணிக்கை

1. 59 நாட்கள்  2. 58 நாட்கள்  3. 60 நாட்கள்

20. விதுசன் தனது 10வது பிறந்த நாளைக் கொண்டாடும் போது அவனது தம்பியின் வயது நான்கு ஆகும். தம்பி 10வது பிறந்த நாளைக் கொண்டாடும் போது விதுசனின் வயது எத்தனை?

1. 20  2. 14  3. 16

21.



சதுரம் ஒன்றின் நிறை 180g எனின் வட்டம் ஒன்றின் நிறை யாது?

1. 80g  2. 120g  3. 60g

✧ பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 22ம், 23ம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

6 ■ 2 = 4  8 ▲ 5 = 13

22. ■ இக் குறியீடு குறித்து நிற்கும் கணிதச் செய்கை


1. −  2. +  3. ×

23. 6 ▲ 3 ■ 4 = [.......] இன் பெறுமானம் யாது?

1. 13  2. 5  3. 6





24.  இவ்வுருவிலுள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை


1. 7  2. 8  3. 9

25. 10 தொடக்கம் 20 வரையுள்ள எண்களில் அடுத்துள்ள இரண்டு எண்களைக் கூட்டும் போது

1. ஓர் ஒற்றை எண் கிடைக்கும்  2. கூற முடியாது.
3. ஓர் இரட்டை எண் கிடைக்கும்

✧ பின்வரும் தொடர்பினை அவதானித்து 26 ஆம், 27 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.




26.  = ............. இதன் விலை?

1. ரூபாய் 50.00  2. ரூபாய் 60.00  3. ரூபாய் 100.00

27.  = ............... இதன் விலை?

1. ரூபாய் 200.00  2. ரூபாய் 150.00  3. ரூபாய் 210.00

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 16 விடைகள் (பகுதி I)

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 21. 3 | 11. 3 | 31. 1 |
| 2. 1 | 22. 3 | 12. 1 | 32. 3 |
| 3. 2 | 23. 3 | 13. 2 | 33. 1 |
| 4. 3 | 24. 1 | 14. 1 | 34. 2 |
| 5. 1 | 25. 3 | 15. 1 | 35. 1 |
| 6. 3 | 26. 2 | 16. 1 | 36. 2 |
| 7. 2 | 27. 1 | 17. 2 | 37. 2 |
| 8. 1 | 28. 2 | 18. 1 | 38. 1 |
| 9. 3 | 29. 3 | 19. 1 | 39. 1 |
| 10. 3 | 30. 1 | 20. 2 | 40. 3 |

காலைக்கதிர்
Kalaikkathir



# அமெரிக்காவுடன் பேசத் தயார்; வடகொரிய அதிபர் அதிரடி

பியாங்யங்,மார்ச்.08

அமெரிக்காவுடன் பேச்சுக்குத் தயார் என வடகொரிய அதிபர் அறிவித்துள்ளார்.

சமாதான பேச்சு நடத்துவதற்காக வடகொரியா வந்துள்ள தென்கொரிய பிரதிநிதிகள் குழு அதிபர் கிம் ஜாங் உன்னை சந்தித்து விரிவான பேச்சு நடத்தினர்.

நீண்ட நாள்களாக இருந்த பகைமை முடிவுக்கு கொண்டு வரும் இரண்டாவது முன்னேற்ற நடவடிக்கையாக, வடகொரியா



அதிபருடன் பேச்சு நடத்துவதற்காக தென்கொரிய அதிபர் மூன் ஜே-இன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இயூய்-யாங் தலைமையில் 10 அதிகாரிகள் கொண்ட குழுவை அமைத்திருந்தார்.

இந்தக் குழு, நேற்றுமுன்தினம் வடகொரியா சென்று அதிபர் கிம் ஜாங் உன்னைச் சந்தித்துப் பேசியது. அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சு நடத்தி பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக இந்தச் சந்திப்பில் தென்கொரிய பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

இந் நிலையில் அமெரிக்காவுடன் பேச்சு நடத்துவதற்கு கிம் விருப்பம் தெரிவித்தார் எனவும் ஆனால், அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒதுக்க அமெரிக்கா கோரிக்கை விடக்கூடாது என அவர் நிபந்தனைகள் விதித்தார் எனவும் கூறப்படுகிறது. இந்தச் சந்திப்பின் முன்னேற்ற நடவடிக்கையாக அடுத்த மாதம் இரு நாட்டு தலைவர்களும் சந்தித்து பேச்சு நடத்துவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தென்கொரிய ஊடகமும் உறுதிப்படுத்தியுள்ளது. (பு)

## பாகிஸ்தானில் தாடிக்கு தடை

பெஷாவர்,மார்ச்.08

பாகிஸ்தானில் தாடியை புதிய நாகரிக முறையில் வெட்டுவதற்கு முடிதிருத்தும் தொழிலாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இளைஞர்கள் புதிய நாகரிக முறையில் தாடி வளர்க்கின்றனர். அதற்காக அங்குள்ள சலூன்களுக்குச் சென்று சீரமைத்துக் கொள்கின்றனர். ஆனால் பக்துன்கவா மாகாணத்தில் தாடியை புதிய நாகரிக முறையில் வெட்ட முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் பெஷாவரில் முடிதிருத்தும் தொழிலாளர்கள் சங்க மாநாடு நடந்தது. அதில் இத்தகைய தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு தலிபான் பயங்கரவாதிகளின் ஆதிக்கம் இருந்தது. அப்போது புதிய நாகரிக முறையிலான தாடி வளர்க்கவும் அதை முடிதிருத்தும் தொழிலாளர்கள் வெட்டி சீரமைக்கவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. தலிபான்களின் ஆதிக்கம் முடிவுக்கு வந்த நிலையிலும் தற்போது அங்கு இதுபோன்ற உத்தரவு பிறப்பிக்



கப்பட்டுள்ளது. எனவே அங்கு மீண்டும் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதை முடிதிருத்தும் தொழிலாளர் சங்க தலைவர் ரீப் காலு மறுத்துள்ளார். பயங்கரவாதிகள் மிரட்டலால் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ள வில்லை. பலவித புதிய நாகரிக முறையில் தாடி வளர்ப்பது இஸ்லாமிய சட்டத்துக்கு எதிரானது என்பதால் தான் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

## ரஷ்யாவின் சரக்கு விமானம் விபத்தில் சிக்கி 39 பேர் பலி

### சிரியாவில் நடந்தது அனர்த்தம்



மொஸ்கோ,மார்ச்.08

சிரியாவில் ரஷ்ய சரக்கு விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் 39 பேர் சாவடைந்துள்ளனர் என ரஷ்ய நாட்டுச் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டு போரில் அதிபருக்கு ஆதரவாக ரஷ்ய இராணுவம் சண்டையிட்டு வருகிறது. இதற்கிடையே, சிரியாவின் லடாகியா மாகாணத்தில் உள்ள ஹேமிமிம் விமானப் படைத்தளத்திற்கு சென்ற ரஷ்ய விமானம் விபத்தில் சிக்கியது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சக செய்திகள் தெரிவிக்கின்றன என அந்நாட்டுச் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விசாரணையில், தொழில்நுட்ப கோளாறு காரணமாக விபத்து நேரிட்டு இருக்கும் எனத் தகவல்கள் தெரிவித்தன. இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 26 பயணிகள், 6 பணியாளர்கள் என மொத்தம் 32 பேர் உயிரிழந்தனர் என முதற்கட்டத் தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், சிரியாவில் நடைபெற்ற விமான விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளது என ரஷ்ய நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக அரசு அதிகாரிகள் கூறுகையில்,

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 33 பயணிகள் மற்றும் விமான நிறுவன ஊழியர்கள் 6 பேர் என மொத்தம் 39 பேர் பலியாகியுள்ளனர். இந்தத் தகவலை அரசு உறுதிப்படுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

## பணக்காரர்களில் முதலிடத்தில் அமேசன் நிறுவுநர் ஜெப் பீசாஸ்

வொஷிங்டன்,மார்ச்.08

உலக பணக்காரர்களுக்கான போர்ப்ஸ் பட்டியலில் அமேசன் நிறுவுநர் ஜெப் பீசாஸ் முதலிடத்தைப் பிடித்துள்ளார் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் இருந்து வெளியாவது போர்ப்ஸ் பத்திரிகை. ஒவ்வொரு ஆண்டும் உலக பணக்காரர்களின் பட்டியலை இந்தப் பத்திரிகை வெளியிட்டு வருகிறது. இந்தப் பட்டியலுக்கு பிஸினஸ் உலகில் ஏகப்பட்ட எதிர்பார்ப்பு உள்ளது.

இந்த நிலையில், இந்த ஆண்டுக்கான உலக பணக்காரர்களின் பெயர்ப் பட்டியலை போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டு உள்ளது. இதில் முதல் இடத்தை பிடித்துள்ளவர் அமேசன் நிறுவுநர் ஜெப் பீசாஸ்.



இவரது சொத்து மதிப்பு 12 ஆயிரம் கோடி டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.


இவரைத் தொடர்ந்து, மைக்ரோ சொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். இவரது சொத்து மதிப்பு 90 ஆயிரம் கோடி டொலர் ஆகும். கடந்த ஆண்டு 544 ஆவது இடத்தில் இருந்த அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இந்த ஆண்டு 200 இடங்கள் பின்தங்கி 766ஆவது இடத்தைப் பெற்றுள்ளார் .

## கிம் ஜாங் – உன்னின் சகோதரரைக் கொன்றது வடகொரியாவே!

வொஷிங்டன்,மார்ச்.08

வடகொரிய அதிபர் கிம் ஜோங்-உன்னின் ஒன்று விட்ட சகோதரர் கிம் ஜோங்-நாம் வடகொரியா அரசின் உத்தரவின்பேரில் நிகழ்த்தப்பட்ட ஒரு நச்சு வேதிப்பொருள் தாக்குதலிலேயே கொல்லப்பட்டார் என அமெரிக்கா கூறியுள்ளது.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள விமான நிலையத்தில், 2017 ஆம் ஆண்டு இரு பெண்கள் வி.எக்ஸ் நர்வ் ஏஜென்ட் VX nerve agent) எனும் நச்சு



அமெரிக்கா கூறுகிறது

வேதிப்பொருளை கிம் ஜோங்-நாமின் முகத்தில் பூசிய நிலையில், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் இறந்தார்.

தற்போது மரண தண்டனைக் குற்றச்சாட்டில் விசாரணையை எதிர்கொண்டுள்ள அந்த இரு பெண்களும் தாங்கள் ஒரு தொலைக்காட்சியின் கேளிக்கை நிகழ்ச்சிக்காக அவர் மீது அந்த வேதிப்பொருளைப் பூசுவதாக நினைத்தோம் எனவும் அது நச்சு என்று தங்களுக்குத் தெரியாது என்றும் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் கிம் ஜாங்-நாம் கொலை செய்யப்பட்டதன் பின்னணியில் வடகொரியா இருந்தது என அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

தனது குடும்பத்தினருடன் தொடர்பில்லாமல் இருந்த கிம் ஜோங்-நாம் வயதில் மூத்தவராக இருந்தாலும், அவரை விட இளையவரான கிம் ஜோங்-உன் அதிபராக்கப்பட்டார். வடகொரியா மீது தனது குடும்பத்தினர் அதிகாரம் செலுத்தி வருவதை கடந்த காலங்களில் விமர்சித்துள்ள அவர், தனது ஒன்று விட்ட சகோதரர் உன், தலைமைப் பண்புகள் இல்லாதவர் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பப்புவா நியூகினியா நிலநடுக்கத்தில் 18 பேர் பலி எனத் தகவல்

போர்ட் மொறிஸ்பி,மார்ச்.08

பப்புவா நியூகினியா தீவில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுமார் 18 பேர் பலியாகியிருக்கலாம் என அமெரிக்க புவிசார் ஆய்வு மையத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பப்புவா நியூகினியா தீவில் நேற்றுமுன்தினம் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் 6.7 ரிச்டர் அளவுகோலாக பதிவானது என அமெரிக்க புவிசார் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திடீரென ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக வீடுகள் குலுங்கியதால் அப்பகுதி மக்கள் சாலைகளில் தஞ்சம் அடைந்தனர். இந்த நிலநடுக்கத்தால் 18 பேர் பலியாகி இருக்கலாம் என முதல் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், பல கிராமங்கள் பாதிக்கப்பட்டு உள்ளமையால் சேத விவரங்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் வெளியாகவில்லை.

பப்புவா நியூகினியா தீவில் சமீபத்தில் சுமார் 7.5 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டு 50இற்கும் மேற்பட்டோர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது.



# எம்.ஜி.ஆர். ரசிகர்களை கவர ரஜனி அதிரடி வியூகம்



சென்னை,மார்ச்.08

தமிழக அரசியலில் அதிரடிப் பிரவேசம் செய்துள்ள ரஜனி, எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் பேசிய பேச்சுக்கள் எம்.ஜி.ஆர். ரசிகர்களை கவர ரஜனி திட்டமிட்டுக் காய் நகர்த்தி வருவது தெரியவந்துள்ளது.

தமிழக அரசியல் களத்தில் அசைக்க முடியாத சக்தியாக இருந்தவர் எம்.ஜி.ஆர்.

அவர்தொடங்கிய அ.தி.மு.கவை அவருக்கு பின்னர் ஜெயலலிதா வழி நடத்தினார். அவரும் செல்வாக்கு மிக்க தலைவராகவே விளங்கினார்.

இந்த நிலையில் தமிழக அரசியலில் அதிரடிப் பிரவேசம் செய்துள்ள ரஜனி, எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் பேசிய பேச்சுக்கள் அதிர வைத்துள்ளன.

அவரது பேச்சின் பெரும்பகுதி எம்.ஜி.ஆரை பற்றியதாகவே இருந்தது. அரசியலில் மட்டுமல்ல சினிமாவிலும் எம்.ஜி.ஆர். ராஜாவாகவே திகழ்ந்தார் என்று புகழாரம் சூட்டிய ரஜனி, எம்.ஜி.ஆர். தனக்கு செய்த உதவிகளையும் பட்டியலிட்டார்.

எனது திருமணம் எம்.ஜி.ஆரால் தான் நடந்தது. ராகவேந்திரா திருமண மண்டபத்தை எம்.ஜி.ஆரின் உதவியால் கட்ட முடிந்தது. இன்று நான் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்றால் அதற்கு எம்.ஜி.ஆர் தான் காரணம் என்று மூச்சு விடாமல் பேசிக் கொண்டே சென்றார் ரஜினி.

இதன் மூலம் எம்.ஜி.ஆர். ரசிகர்களை கவர ரஜனி திட்டமிட்டு காய் நகர்த்தி வருவது தெரியவந்துள்ளது. அ.தி.மு.க வாக்குகளை அவர் தன் வசப்படுத்துவாரா? என்கிற கேள்வியும் எழுந்துள்ளது.

எம்.ஜி.ஆர். போன்று நல்லாட்சியை தருவேன் என்று பேசி இருக்கும் ரஜனி அந்த இடத்தை அடைவதற்கு குறி வைத்தே காய் நகர்த்துகிறார். இது எப்படி பயன் அளிக்கும் என்பது போகப் போகத் தான் தெரியும்.

## தமிழகத்தில் அரசியல் வெற்றிடம் ஏதுமில்லை

### ரஜனிக்கு ஸ்டாலின் பதில்

சென்னை,மார்ச்.08

தமிழகத்தில் அரசியல் வெற்றிடம் எதுவும் இல்லை என நடிகர் ரஜனிகாந்துக்கு தி.மு.க .செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் பதிலளித்துள்ளார்.

சென்னையில் நடந்த எம்.ஜி.ஆர். சிலை திறப்பு விழாவில் பேசிய நடிகர் ரஜனிகாந்த், தமிழக அரசியலில் வெற்றிடம் உள்ளது. தலைவர்களுக்கான வெற்றிடமும் உள்ளது என கூறியிருக்கிறார்.



தமிழக அரசியலில் வெற்றிடம் எதுவும் இல்லை. அதை தமிழக மக்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். எந்த சூழ்நிலையிலும் அடுத்து தி.மு.கதான் ஆட்சி அமைக்கும். அதற்கு மக்கள் தயாராக இருக்கின்றனர்.

புதிய கூட்டணி அமைக்கும் திட்டத்துடன் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தொலைபேசியில் என்னுடன் பேசினார். ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் தி.மு.க. உள்ளது. இந்தச் சூழ்நிலையில் மம்தா ஒரு வேண்டுகோளை வைத்துள்ளார். மக்களவைத் தேர்தல் நடக்க இன்னும் ஓராண்டு காலம் உள்ளது. தி.மு.க. உயர்நிலைக் குழுவில் விவாதித்து பதில் சொல்கிறேன் எனத் தெரிவித்து இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

### மரணம் தொடர்பான ஆணைய விசாரணை:

## மயக்க நிலையிலேயே ஜெயலலிதா அப்பலோ கொண்டு செல்லப்பட்டார்

### அவரது கார் ஓட்டுநர் கண்ணன் அதிரடி வாக்குமூலம்

சென்னை,மார்ச்.08

ஜெயலலிதா மயக்க நிலையிலேயே மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்று அவரது கார் ஓட்டுநர் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார்.

ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரித்து வரும் ஆணையத்தில், ஜெயலலிதாவின் கார் ஓட்டுநர் கண்ணன் அளித்த வாக்கு மூலத்தில்–

22.9.2016 அன்று ஜெயலலிதா அப்பலோ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட அன்றைய தினம் போயஸ் கார்டனில் இருந்தேன். ஜெயலலிதா தனது அறையில் மயங்கிய நிலையில் கிடந்தார்.



அந்த அறையில் சசிகலா மற்றும் சசிகலாவின் உறவினரும், ஜெயலலிதாவின் குடும்ப மருத்துவருமான சிவக்குமார் ஆகியோர் இருந்தனர். அம்புலன்ஸ் வந்ததும் ஜெயலலிதாவை ஸ்ரெச்சரில் தூக்கி வைக்க முயற்சித்தோம். எங்களால் முடியவில்லை.

இதன்பின்பு, பொலிஸ்காரர் ஒருவரை அழைத்து வந்து ஸ்ரெச்சரில் தூக்கி வைத்து அம்புலன்ஸில் ஏற்றினோம். இதன்பின்பு, நான் ஜெயலலிதாவின் காரை எடுத்துக்கொண்டு அப்பலோ மருத்துவமனைக்குச் சென்றேன்.

5 நாள்களுக்குப் பின்னர் மருத்துவமனையில் அவரைப் பார்த்தேன். அப்போது அவர், மருத்துவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார் என்று வாக்குமூலம் அளித்துள்ளார்.

## ‘ஜெ’ மரண விசாரணை: சசிகலா மனு தள்ளுபடி

சென்னை,மார்ச்.08

பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய அவகாசம் கோரி சசிகலா அளித்த மனுவை ஜெயலலிதா மரண விசாரணை ஆணையம் தள்ளுபடி செய்தது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதா மரணம் தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுகச்சாமி தலைமையிலான ஆணையம் விசாரித்து வருகிறது. பல்வேறு தரப்பினருக்கும் சம்மன் அளித்து அவர்களிடம் ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரித்து வருகின்றது.



இந்த நிலையில், பெங்களூர் சிறையில் உள்ள சசிகலா தனது வாக்குமூலத்தை பிரமாணப் பத்திரமாக தாக்கல் செய்ய ஆறுமுகச்சாமி ஆணையம் சம்மன் அனுப்பியிருந்தது. ஆனால், சசிகலா சார்பில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்வதில் இழுத்தடிக்கப்பட்டது. இந்த நிலையில், கால அவகாசம் கோரி சசிகலா அளித்த மனுவை விசாரணை ஆணையம் தள்ளுபடி செய்துள்ளது.

ஏற்கனவே, ஐந்து முறை அவகாசம் நீடிக்கப்பட்டும் சசிகலா பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை என கூறியுள்ள ஆணையம், உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்படாவிட்டால் சசிகலாவிடம் நேரில் சென்று விசாரணை நடத்த நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

## மத்திய அரசில் இருந்து விலகும் தெலுங்குதேசம்

### சந்திரபாபு நாயுடு அறிவிப்பு

விஜயவாடா,மார்ச்.08


சிறப்பு அந்தஸ்து கிடையாது என்று அறிவிப்பால் மத்திய அரசில் இருந்து தெலுங்குதேசம் விலகுவதாக சந்திரபாபு நாயுடு அதிரடி முடிவு செய்துள்ளார்.

ஆந்திரா மாநிலம் கடந்த 2014 ஆம் ஆண்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டு தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்பட்டது.

இதனால் ஆந்திரா மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்படும் என்று அப்போதைய பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்தார்.

இந்த நிலையில் 2014ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மத்தியில் பா.ஜ.க.வும் ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சியும் ஆட்சியைப் பிடித்தன. பா.ஜ.க.வும், தெலுங்கு தேசமும் கூட்டணிக் கட்சிகள் என்பதால், ஆந்திரா மாநிலத்துக்கு உடனடியாக சிறப்பு அந்தஸ்து கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து கொடுக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு இதற்காக டில்லிக்கு சுமார் 25 தடவை சென்று பேச்சு நடத்தினார். ஆனால் எந்த பயனும்



கிடைக்கவில்லை. இதனால் சந்திரபாபு நாயுடுவும், தெலுங்கு தேசம் கட்சித் தலைவர்களும் கடும் அதிருப்தி அடைந்தனர்.

இதற்கிடையே ஆந்திர மாநில அரசுக்கு சிறப்பு அந்தஸ்து தர இயலாது என்று மத்திய நிதி அமைச்சகம் நேற்று முன்தினம் சூசகமாக தெரிவித்தது. சிறப்பு அந்தஸ்துக்குப் பதில் சிறப்பு நிதித் திட்டங்களை அமுல்படுத்துவதாக மத்திய அரசு கூறியது. மத்திய அரசின் இந்த முடிவு சந்திரபாபு நாயுடுவுக்கு கடும் அதிர்ச்சியை அளித்தது. இந்த நிலையில் மத்திய அரசில் இருந்து தெலுங்குதேசம் விலக முடிவு செய்துள்ளது என சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.

## எப்போது தேர்தல் வந்தாலும் ஆட்சியை நாங்கள் பிடிப்போம்

### தினகரன் நம்பிக்கை

சென்னை,மார்ச்.08

எந்த நேரத்தில் தேர்தல் வந்தாலும் நாங்கள் ஆட்சியைப் பிடிப்போம் என்று டி.டி.வி. தினகரன் நம்பிக்கை தெரிவித்தார்.

அதிமுகவில் இருக்கிறவர்களில் 90 வீதத்திற்கு மேல் எங்கள் பின்னால் உள்ளனர். எந்த நேரத்தில் தேர்தல் வந்தாலும் நாங்கள் வெற்றி பெறுவோம். வரக்கூடிய சட்டப்பேரவைத் தேர்தலில் நிச்சயம் 200 தொகுதிகளிலாவது வெற்றி பெற்று ஆட்சி அமைப்போம் .

தமிழக அரசியலில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்று ரஜனி சொல்வது தவறு. நல்ல தலைவர்களை மக்கள்தான் முடிவு செய்வார்கள். ரஜனி அது போன்று சொல்லக்கூடாது.

தேர்தலுக்கு பின்பு எந்தக் கட்சி நிலைத்து நிற்கும், யார் வீட்டுக்குப்போவார்கள் என்பது தெரியும் என்று தெரிவித்துள்ளார்.





நிதாஹஸ் முத்தரப்பு ரி-20

### 5 விக்கெட்கள் வித்தியாசத்தில்

# இந்தியாவை துடைத்தெறிந்தது இலங்கை

நிதாஹஸ் ரி-20 முத்தரப்பு தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது.

நிதாஹஸ் ரி-20 முத்தரப்பு தொடரில் இந்தியா - இலங்கை இடையிலான முதல் ஆட்டம் கொழும்பு பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி கப்டன் சந்திமல் களத்தடுப்பைத் தேர்வு செய்தார். அதன்படி இந்திய அணியின் ரோகித் சர்மா, தவான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ஆட்டத்தின் முதல் ஓவரின் 4ஆவது பந்தில் ரோகித் சர்மா ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் சமீரா பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரெய்னா ஓர் ஓட்டத்தை எடுத்த நிலையில் நுவான் பிரதீப் பந்தில் பவிலியன் திரும்பினார்.

3ஆவது விக்கெட்டுக்கு தவான் உடன் மணிஷ் பாண்டே ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஓரளவு தாக்குப்பிடித்து விளையாடியது. இந்தியாவின் ஸ்கோர் 12.4 ஓவரில் 104 ஓட்டங்களாக இருக்கும்போது மணிஷ் பாண்டே 37 ஓட்டங்களில் (35 பந்தில் 4 பவுண்டரி, 1 சிக்ஸ்) ஆட்டமிழந்தார். அடுத்து ரிப்பந்த் களம் இறங்கினார். அரைசதம் அடித்து தவான் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இந்தியா 20 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 174 ஓட்டங்கள் எடுத்தது. அதன்பின்னர் 175 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக குணதிலக, குஷல் மெண்டிஸ் ஆகியோர் இறங்கினர். இரண்டாவது ஓவரில் வாஷிங்டன் சுந்தர், மெண்டிஸை வீழ்த்தினார்

அடுத்து களமிறங்கிய குஷல் பெரேரா அதிரடியாக ஆடினார். அதனால் அணியின் எண்ணிக்கை உயர்ந்தது. இந்த ஜோடி 58 ஓட்டங்கள் சேர்ந்த நிலையில் உனத்கட், குணதிலகாவை வெளியேற்றினார். அதன்பின் இறங்கிய சந்திமலும் நீடித்து நிலைக்கவில்லை. சஹால் சுழலில் தனது விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

அடுத்து உப்புல் தரங்க களமிறங்கினார். மறுமுனையில் பெரேரா தனது அதிரடியைத் தொடர்ந்தார். இவர் 37 பந்துகளில் 4 சிக்ஸர், 6 பவுண்டரியுடன் 66 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது அணியின் எண்ணிக்கை 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 127 ஆக இருந்தது. அதன்பின் இறங்கிய சானகவும் தரங்காவும் நிதானமாக ஆடினர். ஆனாலும் சஹால் சுழலில் தரங்கா சிக்க ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அப்போது இலங்கை அணி 5 விக்கெட் இழப்புக்கு 136 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அடுத்து திசர் பெரேரா களமிறங்கினார். இருவரும் பொறுமையாக ஆடினர். கடைசி 4 ஓவர்களில் 35 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இருவரும் ஒன்றும் இரண்டுமாக எடுக்க இலங்கை ரசிகர்கள் உற்சாகமாகினர்.

17வது ஓவரில் 11 ஓட்டங்களும், 18வது ஓவரில் 16 ஓட்டங்களும் எடுக்க இலங்கை அணியின் வெற்றி உறுதியானது. கடைசி 2 ஓவரில் 8 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 19ஆவது ஓவரில் முதல் பந்து அகலப்பந்ந ஆனது. அடுத்த பந்தில் ஓர் ஓட்டமும், அதற்கடுத்த பந்தில் 2 ஓட்டங்களும், மூன்றாவது பந்தில் 4 ஓட்டங்களும் எடுத்து இலங்கை அணி வெற்றி பெற்றது. ஆட்ட நாயகன் விருதை குஷல் பெரேரா பெற்றார்.

# அதிக வயதில் சதம்; கெய்ல் சாதனை

உலகக்கிண்ணத் தகுதித் தொடரில் கிறிஸ் கெய்ல் சதம் அடித்த தன் மூலம் ஒரு நாள் போட்டியில் அதிக வயதில் சதத்தை ருசித்த மேற்கிந்தியத்தீவு வீரர் என்ற சிறப்பைப் பெற்றுள்ளார்.

மேற்கிந்தியத்தீவு வீரர் கிறிஸ் கெய்ல், ஒரு நாள் கிரிக்கெட்டில் 3 ஆண்டுகளுக்கு பிறகு சதம் அடித்துள்ளார். அவரது 23ஆவது சதம் இதுவாகும். இதன்மூலம் அதிக சதங்கள் நொறுக்கியவர்களின் பட்டியலில் கெய்ல் 8ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இதுவரை அந்த இடத்தில் இருந்த இந்திய முன்னாள் கப்டன் சவுரவ் கங்குலி (22 சதம்) 9ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

கெய்லின் தற்போதைய வயது 38 ஆண்டு 166 நாள்கள். இதற்கு முன்பு தேஸ்மான்ட் ஹெய்ன்ஸ் (38 ஆண்டு 18 நாள்கள்) இந்தப் பெருமையை தக்கவைத்திருந்தார்.







### உலகக்கிண்ணத் தகுதிப்போட்டி

## கெயில், ஹெட்மையர் அதிரடி; மேற்கிந்தியத்தீவு வெற்றி

உலகக் கிண்ணத் தகுதிச் சுற்றுத் தொடரில் கிறிஸ் கெய்ல் மற்றும் ஹெட்மையரின் அதிரடி சதங்களால் மேற்கிந்தியத்தீவு அணி 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை வீழ்த்தியது.

ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிப்போட்டித் தொடரில் மேற்கிந்தியத்தீவு அணி நேற்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை எதிர்கொண்டது. நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவு அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அதன்படி கிறிஸ் கெய்ல், லெவிஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். லெவிஸ் 31 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து ஹெட்மையர் களம் இறங்கினார். இவரும் கிறிஸ் கெய்லும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

ஹெட்மையர் 93 பந்துகளில் 14 பவுண்டரி, 4 சிக்ஸருடன் 127 ஓட் டங்களும், கிறிஸ் கெய்ல் 91 பந்துகளில் 7 பவுண்டரி, 11 சிக்ஸருடன் 123 ஓட்டங்களும் குவித்தனர். இரு வரின் ஆட்டத்தால் மேற்கிந்தியத்தீவு 50 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 357 ஓட்டங்கள் குவித்தது.

இதையடுத்து, 358 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி இறங்கியது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப் புக்கு 297 ஓட்டங்கள் மட்டுமே எடுக்கமுடிந்தது. இதையடுத்து, 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவு அணி வெற்றி பெற்றது.

# ஐ.பி.எல். ஏலம் ஏமாற்றம்

- ஜோ ரூட்

இங்கிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரான ஆன ஜோ ரூட், ஐ.பி.எல். ஏலத்தில் எந்த அணிகளும் தன்னை ஏலம் எடுக்காதமை ஏமாற்றம் அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். சீசன் 2018இற்கான வீரர்கள் ஏலம் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்றது. இதில் மார்க்யூ வீரர்கள் பட்டியலில் இடம்பிடித்திருந்த ஜோ ரூட்டை எந்த அணியும் ஏலம் எடுக்கவில்லை.

தொடரின் மத்தியில் இங்கிலாந்துக்கு சர்வதேச போட்டிகள் இருக்கும் என்பதால், அணி உரிமையாளர்கள் கண்டுகொள்ளவில்லை. இங்கிலாந்து கிரிக்கெட் சபையும் ஜோ ரூட் ஐ.பி.எல். தொடரில்



விளையாடுவதை விரும்பவில்லை.

இந்த நிலையில் ஐ.பி.எல். ஏலத்தில் ஏலம் போகாதது தனக்கு ஏமாற்றம் அளிக்கிறது. இதற்கு முக்கியமான காரணம், இந்தியா சென்று ஏராளமான ரி-20 போட்டிகளில் விளையாட விரும்பினேன். அங்கு சென்று பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதல்ல. நான் அந்த நிலையில் இல்லை.

என்னைப் பொறுத்தவரையில் எந்தவொரு ஐ.பி.எல். அணிக்கும் நான் சரியான நபராக இருக்கவில்லை. இது எனக்கு ஏமாற்றம் அளிக்கிறது. ஆனால், இதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை என்று ஜோ ரூட் தெரிவித்துள்ளார்.

# தவறுகளில் இருந்து பாடம் கற்போம்

### ரோகித்சர்மா தெரிவிப்பு

இலங்கை அணியிடம் தோல்வியடைந்து தொடர்பாகத் தவறுகளில் இருந்து நாங்கள் பாடம் கற்றுக்கொள்வோம் என ரோகித் சர்மா கருத்து தெரிவித்துள்ளார்.

3 நாடுகள் போட்டியில் இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் 5 விக்கெட்டுகளால் இலங்கையிடம் தோற்றது. தோல்வி தொடர்பாக கப்டன் ரோகித்சர்மா கூறியதாவது:-

175 ஓட்டங்கள் என்பது நல்ல கெளரவமான ஓட்டங்களாகவே கருதுகிறேன். ஆனால் ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு ஏற்ற வகையில் தான் இருந்தது. இலங்கை அணியின் தொடக்கம் மிகவும் அபாரமாக இருந்தது. அந்த அணி வீரர்கள் சிறப்பாக ஆடினார்கள். பாராட்டு எல்லாம் அவர்களைச் சாரும். எங்களது பந்துவீச்சாளர்கள் நன்றாக பந்துவீசவே முயற்சித்தனர். சில நேரம் நாம் நினைப்பது நடப்பது இல்லை.




இந்தப் போட்டியில் வெற்றி பெறுவோம் என்று அதிக நம்பிக்கை வைத்திருந்தேன். விக்கெட்டுகளைக் கைப்பற்றுவதில் எங்கது செயற்திட்டம் எடுபடவில்லை. தவறுகளில் இருந்து நாங்கள் பாடம் கற்றுக்கொள்வோம் என்று தெரிவித்துள்ளார்.

## இன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பானது, சமீபத்திய இன வன்முறைகள் தொடர்பாக வருத்தமடைகின்றது. அத்துடன் இந்த நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஐ.நாவானது, இந்த வன்முறைகளுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், இயல்பு நிலையைக் கொண்டுவரவும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளை வலியுறுத் துகின்றது.

மேலும், நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்துமாறும், மனித உரிமைகளையும், எல்லோருக்குமான பாதுகாப்பையும் உறுதி செய்யுமாறும் அதிகாரத் தரப்பினரையும், பொதுமக்களையும் வேண்டி நிற்கின்றது. - என்றுள்ளது.(ஐ)

## அமெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் இனந்தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் இரவு தாக்கப்பட்டுக் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி-செல்வாநகரைச் சேர்ந்த இரத்தினம் துரைசிங்கம் (வயது - 71) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்றவர் எனவும், அவரது பிள்ளைகள் கனடாவில் வாழ்கின்றனர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவர் தனது காணியில் அமைந்துள்ள வீட்டைப் பார்வையிட வருகை தந்தபோதே சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில், கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (ஐ)

## கண்டிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனமோதல்கள் உச்சமடைந்து வருகின்றமையைத்தொடர்ந்தே அவர் அவசரமாக அங்கு விரைந்தார்.

கண்டியில் அமைதியை ஏற்படுத்துவது குறித்து மதத் தலைவர்கள், படையினர் மற்றும் சட்டம் ஒழுங்கைப் பேணும் அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.

அத்துடன் வன்முறைகளைத் தடுப்பதற்கான உச்சபட்ச அதிகாரங்களைப் பயன்படுத்துமாறும் அவர் அதிகாரிகளுக்கு அங்கு வைத்துப் பணிப்புரை வழங்கினார். (ஐ)

## துண்டிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துண்டிக்கப்பட்ட நிலையில் ஒருவரின் தலை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொதியொன்றில் போடப்பட்டிருந்த நிலையிலேயே இந்தத் தலை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

அந்தத் தலை யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும், இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் கூறினர். (ஐ)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அவசரகால சூழ்நிலை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடிய இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

நாங்கள் சட்டம், ஒழுங்கு அமைச்சரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து நாட்டின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவசரமாகக் கண்டிக்கு சென்றுள்ளார். அங்கு விசேட கலந்துரையாடலொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக கடற்படைத் தளபதி தலைமையில் புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சிறிய விடயமொன்று இந்தளவு தூரம் பெரிதாகும் வரை அரசு வேடிக்கை பார்த்தமையையிட்டு நாங்கள் கடுமையாக ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் எமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளோம்.

அதேவேளை, யுத்த காலச் சூழ்நிலைகளின்போது முஸ்லிம்களின் தற்பாதுகாப்பு கருதி அரசினால் ஆயுதங்கள் வழங்கப்பட்டன. அதுபோன்று, தற்போதும் ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும். நிலைமையைப் பாதுகாப்பு தரப்பால் கட்டுப்படுத்த முடியாவிட்டால் முஸ்லிம்கள் தமது இருப்பை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என கோரிக்கை விடுத்துள்ளோம். - என்றார். (ஐ)

## மரத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தார்.

முழங்காவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ - 32 யாழ். - மன்னார் பிரதான வீதியில் மண்டக்கல்லாறை அண் மித்த பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதிக வேகமாகச் சென்ற கார் கட்டுப்பாட்டை இழந்து மரமொன்றுடன் மோதியதன் காரணமாகவே விபத்து ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

இதில் காரைச் செலுத்தி வந்த - மன்னார் வைத்திய சாலையில் கடமையாற்றும் - யாழ். கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த வைத்தியரான கே.அரவிந்தன் (வயது-41) உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் முழங்காவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை முழங்காவில் பொலிஸா முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-112)

## மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டியில் நேற்று இடம்பெற்ற வன்முறைகளில் முஸ்லிம்களின் சொத்துக்களுக்குத் தீ மூட்டப்பட்டுள்ளது.

வன்முறைகளைக் குறைக்க ஊரடங்கு நடைமுறையிலுள்ள பகுதி மக்களை வீடுகளுக்குள் இருக்குமாறு அரசு கேட்டுள்ளது.

பொது மக்கள் வீதிக்கு வருகின்றமையால் வன்முறையாளர்களை அடையாளம் காண்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக பொலிஸ் தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இன வன்முறைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிவரைஊரடங்குதொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ்மா அதிபர் அறிவித் துள்ளார்.

அங்கு இன வன்முறைகள் உச்சமடைந்து வருகின்றமையை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் அக்குரண, கட்டுகஸ்தோட்டை உள்ளிட்ட பல பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் மீண்டும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமையால், பதற்றநிலை மோசமடைந்துள்ளது.

ஊடரங்கு நடைமுறைப் படுத்தப்பட்ட வேளையிலும் கும்பல்களால் முஸ்லிம்களின் உடைமைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்று அறியமுடிகின்றது.

நேற்று சில மணித்தியாலங்களுக்குள் பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அக்குரண, 8 ஆவது மைல் கல், கட்டுகஸ்தோட்டை பகுதிகளில் முஸ்லிம்களின் 25 இற்கு மேற்பட்ட கடைகள், தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதியில் வானில் கரும்புகை மூட்டம் காணப்பட்டது.

வன்முறைக் கும்பலைக் கலைக்க, இராணுவத்தினர் பொல்லுகளுடன் துரத்திச் செல்கின்றனர். இதனால் பல்வேறு பகுதிகளிலும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம்களை அமைதியாக இருக்குமாறு ஒலிபெருக்கி மூலம், முஸ்லிம் தலைவர்கள் கோரி வருகின்றனர்,

கும்பல்களால் எரியூட்டப்படும் முஸ்லிம்களின் வணிக நிலையங்களில் இராணுவத்தினர் தீ அணைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரினதும்விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

கண்டி - கட்டுகஸ்தோட்டையில் கும்பல் ஒன்றால் தீக்கிரையாக்கப்பட்ட முஸ்லிம்களின் வணிக நிலையங்களில், சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

கட்டுகஸ்தோட்டை - உகுரெசபிட்டிய பகுதியில் உள்ள முஸ்லிம்களின் வணிக நிலையங்கள், நேற்று முற்பகல் 11.30 மணிக்கும் பிற்பகல் ஒரு மணிக்கும் இடையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டு தீயிட்டு எரிக்கப்பட்டன.

தீயிட்டு எரிக்கப்பட்ட முஸ்லிம்களின் வெதுப்பகத்தின் முன்பாக, கும்பல் ஒன்றால் சிங்கக்கொடியும் பறக்கவிட்டப்பட்டுள்ளது.

சிங்கள பௌத்த அடிப்படைவாத அமைப்புகளால் பயன்படுத்தப்படும், வாளேந்திய சிங்கம் மாத்திரம் இடம்பெற்றுள்ள கொடியே அங்கு பறக்க விடப்பட்டுள்ளது. (ஐ)

## கண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டம் முழுவதும் இராணுவம், சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். அங்கு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதும் வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. (ஐ)

## பலவந்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது.

அது 37 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. சட்ட வரைவுக்கு எதிராக 16 வாக்குகள் அளிக்கப்பட்டன.

இந்தச் சட்டவரைவு மீதான விவாதம் கடந்த ஆண்டு ஜூலை 5ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுப் பிற்போடப்பட்டது. மீண்டும் செப்ரெம்பர் 19ஆம் திகதியும் இந்த விவாதம் பிற்போடப்பட்டது.

பல்வேறு தரப்புகளினதும் எதிர்ப்புகளால் அரசால் பிற்போடப்பட்ட இந்தச் சட்டவரைவு மீதான விவாதம் நேற்று நடத்தப்பட்டது.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாது காப்பு அளிக்கும் ஐ.நாவின் சர்வதேசப் பிரகடனத்தில் இலங்கை அரசு 2015 டிசெம்பரில் கையெழுத்திட்டது.

அதற்கு அமையவே, பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சட்டவரைவு படையினருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று கூட்டு எதிரணி எதிர்ப்புத் தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதால், இலங்கையில் நபர் ஒருவர் பலவந்தமாக ஆக்கப்பட்டால், அவரைக் கடத்தியவருக்கு எதிராக மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடியும். மேல் நீதிமன்றில் ஆள்கடத்தல் குற்றம் நிரூபிக்கப்பட்டநபருக்கு 25 ஆண்டுகளுக்குக் குறையாத சிறைத்தண்டனை விதிக்கப்படவேண்டும். ஒரு மில்லியன்ரூபாவை விஞ்சாததண்டம் செலுத்தவேண்டும். மேலும் காணாமல் ஆக்கப்பட்ட நபர் உயிரிழந்திருப்பின் அவர் சார்பான உறவினர்களுக்கு 5 லட்சம் ரூபாவுக்குக் குறையாத இழப்பீட்டை வழங்கவேண்டும் என்று சட்டம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினர்கள் முல்லைத்தீவில் நடத்திவரும் தொடர் போராட்டம் இன்றுடன் ஓராண்டை எட்டுகின்றது.

இந்நிலையில், இன்று மாபெரும் போராட்டம் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாகக் கொட்டகை அமைத்துப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அன்று முதல் அவர்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களைப் பல்வேறு தரப்பினரும் சந்தித்துப் பேசியிருந்தபோதும் அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

இன்றுடன் அவர்களின் போராட்டம் ஓராண்டை எட்டுகின்றது. இன்று அவர்கள் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்துகின்றனர்.

இந்தப் போராட்டத்துக்கு அரசியல் தலைவர்கள், மத குருமார், புத்திஜீவிகள், பொது மக்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டு ஆதரவு தர வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ)

## அவசரகாலச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் பரவியுள்ள நிலையில் - அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. இந்த நிலையில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில்,

'சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள் மற்றும் சமத்துவம் என்பன அமைதியான சக வாழ்வுக்கு முக்கியம்.

மத வன்முறைகளில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு எதிராகச் செயற்படவும், மதச் சிறுபான்மையினரையும் அவர்களின் வழிபாட்டு இடங்களையும் பாதுகாக்கவும் அரசு விரைந்து நடவடிக்கை எடுப்பது முக்கியமானது.

அனைவரினதும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களைப் பாதுகாக்கும் அதேவேளை, அரசால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை விரைவாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் தங்கியுள்ள அமெரிக்கக் குடிமக்களுக்கான பாதுகாப்பு எச்சரிக்கை அறிவிப்பை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுவரும் வன்முறைகளைக் கருத்தில் கொண்டே, இலங்கையில் தங்கியுள்ள தனது குடிமக்களுக்கு இந்தப் பாதுகாப்பு எச்சரிக்கையை அமெரிக்கா விடுத்துள்ளது.

தொடரும் சமூகப் பதற்ற நிலையால், இலங்கை அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்துள்ளதுடன், கண்டி மாவட்டம் உள்ளிட்ட சில இடங்களில் ஊரடங்குச் சட்டத்தையும் பிறப்பித்துள்ளது.

அடுத்த சில நாள்களில் மேலும் சம்பவங்கள் நிகழும் சாத்தியங்கள் உள்ளன. உள்ளூர் ஊடகங்களின் அறிவிப்புகளைக் கவனத்தில் கொள்ளுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் இந்த எச்சரிக்கை, இலங்கையின் சுற்றுலாத் தொழிற்துறைக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், அவசரகாலச் சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டம் என்பனவற்றால், சுற்றுலாத் துறைக்குப் பாதிப்பு இருக்காது என்று அரசு தெரிவித்துள்ளது. (ஐ)

## பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபைச் சுத்திகரிப்பாளர்கள் நேற்றுக் காலை சுத்திகரிப்புப் பணியை மேற்கொள்ளச் சென்றபோது அந்த மலசல கூடத்திலிருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. அதனைத் திறந்து பார்த்தபோதே சிசுவின் சடலம் இருந்தமை கண்டறியப்பட்டது.

இந்த மலசல கூடம் பாவனையின்றி இருப்பதாகவும், இனந்தெரியாத யாரோ ஒருவர் சிசுவை அங்கு கொண்டு வந்த போட்டிருக்கலாமொன்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட சிசுவின் சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ -7)

# அவசரகாலச் சட்டம் குறித்து மிக அவதானம் வேண்டும்!

## தமிழ்க் கூட்டமைப்பிடம் வலியுறுத்துகிறார் சுரேஷ்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 08

கண்டி – திகண வன்செயல் இலங்கையில் சிறுபான்மை இனங்களின் நிலையைத் தெளிவாகக் காட்டியிருப்பதாகக் கூறியுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், இந்த வன்செயல்களைத் தொடர்ந்து அமுலாக்கப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம் தொடர்பாகத் தமிழ்த் தலைவர்கள் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப் பொறுப்புணர்வுடன் செயற்படுவது அவசியமான ஒன்று எனவும் கூறியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே சுரேஷ் பிறேமச்சந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த காலத்தில் இடம்பெற்றமைபோல இன்று மைத்திரிபால சிறிசேன ஆட்சியிலும் முஸ்லிம் மக்கள் மீதான வன்செயல் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றில் உரையாற்றும்போது, வெளியில் இருந்து வந்தவர்களே மக்களுடைய சொத்துக்களை அழித்து வன்செயலைத் தூண்டக் காரணமானவர்கள் எனவும், இந்த வன்செயலுக்காக சிங்கள மக்கள் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அவ்வாறெனில் இந்த அரசால் இவ்வாறான வன்செயல்களை கட்டுப்படுத்த இயலாமைக்கான காரணம் என்ன? இன்றும் சிங்கள, பௌத்த கடும்போக்காளர்கள் இந்த நாட்டில் மிகச் சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும் நடமாடுகிறார்கள், ஊடகங்களைச் சந்திக்கிறார்கள். கடந்த சில தினங்களுக்குள் ஒருவர் ஊடகவியலாளர் சந்திப்பில் 'கொன்றால், கொல்வோம்' என்று பகிரங்கமாகக் கூறுகின்றார். இவ்வாறானவர்களை அரசு கண்டுகொள்ளாமல் இருப்பதன் பின்னணி என்ன?

அதேபோல் இலங்கையில் பொலிஸ், இராணுவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் புலனாய்வு அமைப்புக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்களால் இவ்வாறான பாரிய இனமோதல்கள் தொடர்பாக எதிர்வுகூற முடியாமல் உள்ளதா? இதற்கான பதிலை ஜனாதிபதி, பிரதமர் மக்களுக்குக் கூறவேண்டும்.

அரசு இந்த விடயத்தில் கண்டுகொள்ளாமல் இருப்பதன் பின்னணி சட்டம், ஒழுங்கு அரசின் பிடிக்குள் இல்லை என்பதா? எது, எவ்வாறாயினும் இலங்கையில் சிறுபான்மை இனங்களின் நிலையை இந்த வன்செயல் தெளிவாகக் காட்டியிருக்கின்றது. அதேபோல் இந்த வன்செயல்களைக் காரணம் காட்டி மீண்டும் அவசர காலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறே ஆரம்பத்தில் அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது 6 மாதங்களுக்கு எனக் கூறப்பட்டது. ஆனால் அது பின்னர் 30 வருடங்கள் நீடித்தது. அதன் வலியை, வேதனையை தமிழ் மக்கள் நன்றாக உணர்ந்தவர்கள். எனவே தமிழ்த் தலைவர்கள் – குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் – மற்றும் இஸ்லாமியத்தலைவர்கள் இந்த அவசரகாலசட்டம் தொடர்பாகப் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும்.

வன்செயல்கள் வடமாகாணத்தில் இல்லை. வடக்கு மாகாணத்துக்கும் சேர்த்து அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருப்பதன் பின்னணி தொடர்பாகத் தமிழ்த் தலைமைகள் அவதானமாக இருக்கவேண்டும் – என்றார். (ஐ-7)

# நல்லிணக்கத்தை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்

## மல்வத்து, அஸ்கிரிய மஹாநாயக்க தேரர்கள் கூட்டாக அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 08

நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் நிலைமையை கட்டுப்படுத்தி வழமை நிலைக்கு கொண்டுவரவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று மல்வத்து மற்றும் அஸ்கிரிய மஹாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் சமகால நிலைமை தொடர்பில் விசேட பேச்சு ஒன்று நேற்று முன்தினம் மாவட்ட செயலக காரியாலயத்தில் இடம்பெற்றது.

மல்வத்து அஸ்கிரிய பீட மஹாநாயக்கர்கள் இந்த பேச்சில் கலந்துகொண்டு இவ்வாறு குறிப்பிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு தமது கருத்துக்களை முன் வைத்தனர்.

நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் நிலைமையை கட்டுப்படுத்தி வழமை நிலைக்குக் கொண்டுவரவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று மகாநாயக்க தேரர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பேச்சு தொடர்பில் மல்வத்து பீட மஹாநாயக்க தேரர் நியங்கொட விஜிதசிறி தேரர் கருத்து வெளியிட்டார். அமைச்சர்களான எஸ்.பி.திசா நாயக்க, ரவூப் ஹக்கீம், பைசர் முஸ்தபா, மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோரும் இதன்போது கருத்துத் தெரிவித்தனர்.

### அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாதெனில் – உங்களால் நாட்டில் எண்ணிக்கையில் குறைந்த சமூகத்தினருக்காக எழுந்து நிற்க முடியாதெனில் – உங்களுக்கு இந்த நாட்டை ஆளுவதற்கு உரிமை இல்லை."

–இவ்வாறு அரசுத் தரப்பைக் காட்டமாகச் சாடியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன்.

கண்டி – திகண வன்முறைச் சம்பவங்கள் குறித்து நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே இப்படி அரசுத் தரப்பை பிடிபிடித்தார் சுமந்திரன். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

'திகண' வன்முறைச் சம்பவங்கள், அதுபோன்ற நிகழ்வுகள் இந்நாட்டிற்கு புதிய விடயங்களல்ல. இந்நாட்டின் 70 வருட சுதந்திர வரலாறானது எண்ணிக்கையில் சிறுபான்மையினருக்கு எதிரான இத்தகைய சம்பவங்களால் நிறைந்துள்ளது. இது நல்ல விடயமல்ல. இது பெரும்பான்மையினரின் நல்லதொரு பிரதிபலிப்பு அல்ல. அதாவது காலத்துக்கு காலம் எண்ணிக்கையில் குறைந்த மக்கள் இத்தகைய வன்முறைகளை அனுபவிக்க வேண்டும் என்பதும் அவ்வாறான நிலைமைகளில் தண்டணை கிடைக்காதென்ற நம்பிக்கையும் நல்லவையல்ல.

வரலாற்றில் நிகழ்ந்த இவ்வாறான பல சம்பவங்கள் குறித்து இங்கு குறிப்பிடப்பட்டது. இத்தகைய எந்தத் தருணத்திலும் குற்றவாளிகள் கைது செய்யப்படவோ, சட்டநடவடிக்கை எடுக்கப்படவோ இல்லை என்பது புலனானது. தண்டனை கிடைக்காதென்ற நம்பிக்கை இவ்வாறான விடயங்களைச் செய்வதற்கான தைரியத்தை வரவழைக்கிறது. நீண்ட, இவ்வாறான சம்பவக் கோலங்களைக் கொண்டதோர் வரலாற்றின் விளைவால், தமக்கு எதிரானசட்ட நடவடிக்கை ஏதும் எப்போதும் எடுக்கப்பட மாட்டாது என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளனர். இது கவலைக்கிடமானதோர் விடயமாகும்.

கண்டி மாவட்டத்தில் சட்டமும் ஒழுங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டு நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். பிரேத பரிசோதனையும் அவசியமானது. ஆனால் அத்துடன் எல்லாம் முடிந்துவிடவில்லை. நாங்கள் இவ்வாறான சம்பவங்கள் நிகழும் போதெல்லாம் வெறுப்பை, அனுதாபங்களை தெரிவிப்பதும் இன்னொரு அத்தகைய சம்பவம் சில மாதங்களிலேயே நிகழ்வதும் தொடர்கின்றது. இவ்வாறான மனநிலை முழுமையாக மாறவேண்டும்.

2015 ஆம் ஆண்டு ஜனவரியில் மாற்றமொன்று நேர்ந்த போது இந்நாட்டின் பிரஜைகளின் எதிர்பார்ப்பு வித்தியாசமானதாக இருந்தது. அவர்கள் இந்ததண்டனைகிடைக்காதென்ற நம்பிக்கை கலாசாரம் முடிவுறும் என எதிர்பார்த்தனர். எல்லா மக்களும் எவ்வகையான இனம், மதம், பின்னணி, புவியியல் வாழிட வேறுபாடுகளுக்கு மத்தியில் அமைதியான வாழ்கை வாழலாம் என எதிர்பார்த்தனர். ஆனால் அது நொறுக்கப்பட்டு விட்டது. இந்த ஒரு சம்பவத்தினால் மட்டுமல்ல. இந்த அரசாங்கமும் கொண்டிருக்கும் அதே மாதிரியான மனப்பான்மையினாலும் ஆகும். அம் மனப்பான்மை யாதெனில், 'பெரும்பான்மை சமூகத்தினரில் எங்களுக்கு எதிரிகளை உண்டாக்காமல் இருப்போம்' என்பதே. ஆனால் பெரும்பான்மை சமூகம் உண்மையில் இவ்வன்முறைகள் தொடர்வதை எதிர்பார்க்கவில்லை. பெரும்பான்மையினரில் 90–95% கும் அதிகமானோர் சமாதானத்தைவிரும்புபவர்களும் இவ்வாறான சம்பவங்களால் வெறுப்படைந்தவர்களுமாவர்.

ஆயினும், அரசாங்கத்திடம் எப்போதும் கடும் அரசியற் போக்குடையவர்களின் தவறான செயல்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் செயற்பட வேண்டும் என ஒரு நம்பிக்கை இருக்கிறது. ஆகவே இதை மென்மையாக கையாளுகிறீர்கள். பொறுப்புக்கூறல் தொடர்பாக நங்கள் கேள்வியெழுப்பும் போது உடனடியாக அரசாங்கம் பின்னடிக்கின்றது, அதைச்செய்தால் நாங்கள் மக்கள் ஆதரவை இழந்துவிடுவோம் என அரசாங்கம் நினைக்கின்றது. அது உண்மையல்ல. இவ்வாறான, தண்டனை கிடைக்காதென்ற நம்பிக்கையளிக்கும் செயற்பாடுகளே வன்முறைகளை அதிகரிக்கச் செய்கின்றன.

நாங்கள் பெரும்பான்மையினர் என் நினைப்பவர்கள் சிங்களம் மற்றும் பௌத்தத்தை ஆதரித்து பேசினால் தாங்கள் பாதுகாப்பாக இருந்துவிடலாம் என நினைக்கின்றனர். இதை பல சந்தர்ப்பங்களில் நிரூபித்து உள்ளனர். அது வெறுக்கத்தக்க விடயமாகும். இது, இந்நாட்டில் மீதும் இவ் அரசாங்கத்தின் மீதும் வந்துள்ள அவமானமாகும். வெறும் வாய்வார்த்தைகளால் வேறு பல கொள்கைகளுக்கும் எண்ணங்களுக்கும் பங்காற்றி இருந்தும், அதே போக்கிலேயே நடந்துகொள்கின்றனர். உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளின் விளைவாலும் கடும் அரசியல் போக்குகள் வளர்ந்து வருகின்றன என்று புரிந்துகொண்டமையாலும் அரசாங்கம் செயலிழந்து போகின்றது, அரசாங்கம் எழுந்து நின்று சரியானத்தைச் செய்ய வலுவில்லாது உள்ளது. நாங்கள் பெரும்பான்மையினரின் ஆதரவை இழக்கின்றோம், ஆகவே நாம் பின்னகர வேண்டுமென அரசாங்கம் நினைக்கின்றது. இவ்வாறான மனப்பாங்கே அரசாங்கம் தற்போது கொண்டுள்ளது

இது இவ்வாறே செல்லுமாயின், மாற்றம் நேரப்போவதில்லை. பெரும்பான்மையினர் மத்தியில் கடும் அரசியற்போக்குடையவர்களின் தவறான செயல்களை ஊக்கமளிக்கும் வகையில் செயற்பட வேண்டும் என்ற அடிப்படையான எண்ணம் மாற வேண்டும். அது மாறும் வரையில் நாட்டிலுள்ள ஏனைய சமூகத்தினர் சுயமரியாதையுடன் வாழ முடியாது; நாங்கள் இந்நாட்டில் சமவுரிமையுள்ள பிரஜைகள் என கூற முடியாது; எங்கள் உயிர்கள் பாதுகாப்பாக இருக்கும் என்னும் நம்பிக்கையை கொண்டிருக்க முடியாது.

கொறடா இவ்விடயங் களை வெளிக்கொணர்ந்தார் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆயினும் அவர் எதிர்க்கட்சியை சார்ந்தவர். ஆனால் அவர் முன்வைத்த கருத்துக்களை நான் மெச்சுகின்றேன். துரதிர்ஷ்டவசமாக அத்தகைய முதுகெலும்பு இலங்கை அரசாங்கத்திடம் குறைவுபடுகின்றது. அது ஜனாதிபதியிடமோ பிரதமரிடமோ எந்த வொரு அமைச்சர்களிடமோ இல்லை. உங்களால் சரியானவற்றிக்காக எழுந்து நிற்க முடியாதெனில், உங்களால் நாட்டிலுள்ள எண்ணிக்கையில் குறைந்த சமூகத்தினருக்காக எழுந்து நிற்க முடியாதெனில், உங்களுக்கு இந்நாட்டை ஆளுவதற்கு உரிமை இல்லை. – என்றார். (உ)

# கர்ப்பிணிப் பெண் கொலை; அறிக்கை கிடைக்கவில்லை

## பொலிஸார் மன்றில் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

ஊர்காவற்றுறை கர்ப்பிணிப் பெண் கொலை வழக்கைக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றுவது தொடர்பாகப் பணிப்புரை நீதிமன்றம் விடுத்த அறிக்கை பொலிஸ்மா அதிபருக்கு இன்னமும் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் மன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலை வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே பொலிஸார் இதனை மன்றுக்குத் தெரிவித்தனர்.

மேற்படி அறிக்கை பொலிஸ்மா அதிபருக்குக் கிடைக்கவில்லை எனவும், அது கிடைத்திருந்தால் அது தொடர்பான பதில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து அந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் 21ஆம் திகதி வரை ஒத்திவைத்தமையுடன், அதுவரை சந்தேக நபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்கவும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-7)


# Jaffna Badminton Club

JBC Jaffna Badminton Club

யாழ். மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான 17 மற்றும் 20 வயதுக்கு உட்பட்டவர்களுக்குரிய – பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி. யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் பங்குபெற்ற முடியும். எதிர்வரும் 10, 11 ஆம் (சனி, ஞாயிறு) திகதிகளில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக அரங்கில் நடத்தப்படவுள்ள இந்தச் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்களைப் பின்வரும் தரப்புகளுடன் தொடர்பு கொண்டு சமர்ப்பிக்கலாம். (அனுமதி முற்றிலும் இலவசம்)

தொடர்புகளுக்கு:-
- ★ S.அறிவுச்செல்வன் - 077 757 0092 (arivuchchelvan@gmail.com)
- ★ S.காண்டீபன் - 077 789 4924
- ★ Viber & Whatsapp - 077 337 9465














இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.